Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95

Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14

வேணு : 19 | செப்டம்பர் 2013 | கானம் : 2

ஆகஸ்டு 25 சென்னை நுங்கம்பாக்கத்தில் நகரசங்கீர்த்தனம்



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

Related Websites : www.namadwaar.org    Email:contact@namadwaar.org

NO FAME · NO SELF INTEREST · NO NAME · ONLY GOD

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை



வேணு : 19 | செப்டம்பர் 2013 | கானம் : 2

Delivered by India Post    www.indiapost.gov.in

PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI







ஆகஸ்டு 28 – 2013
மதுரபுரி ஆஸ்ரமம்
20வது வருட
ப்ரும்மோத்ஸவத்தில்
நந்தோத்ஸவம்



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI



ஆகஸ்டு 9 – சென்னை ப்ரேமிக பவனத்திற்கு பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் விஜயம்



ஆகஸ்டு 15 – கொடுங்கையூர் ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் சத்சங்கம்



ஆகஸ்டு 15 – சக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை மற்றும் G.O.D இந்தியா டிரஸ்ட் சார்பாக அதிக மதிப்பெண் பெற்ற மாணாக்கர்களுக்கு பரிசு வழங்குதல் -இடம் – மேலே -மஹாரண்யம் அரசு பள்ளி



ஆகஸ்டு 15 – மணிமங்கலம் அரசு பள்ளியில் பரிசு – (நடு-வல) G.O.D இந்தியா டிரஸ்ட் சார்பாக Dr.ஆ.பாக்யநாதன், தூத்துக்குடி சக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளையை சேர்ந்த திரு.கண்ணன்



ஜூலை 29 – மஹாரண்யம் அரசு பள்ளியில் ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்ட் மற்றும் DENTISTREE இணைந்து வழங்கிய பல் மருத்துவ முகாம்

PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI




ஆகஸ்டு 18, 2013 - சென்னை தியாகராய நகர் தாராசந்த் கலாட்டா பள்ளியில் G.O.D சென்னை நடத்திய "சம்ஸ்க்ருதி - 2013"



ஆகஸ்டு 3, 2013 - பெங்களூர் டவுன் ஹாலில் G.O.D பெங்களூரு நடத்திய புராநவா 2013



ஆகஸ்டு 4, 2013 - சென்னை மாம்பலத்தில் G.O.D சென்னை நடத்திய "Youth Leadership Workshop- 2013"






ஆகஸ்டு 2013 - சிங்கப்பூர் நாமத்வாரில் சத்சங்கம் - ராமானுஜம்ஜி மற்றும் ஸ்ரீஅஸ்வின்



ஆகஸ்டு 2013 - மலேசிய நாமத்வாரில் சத்சங்கம் - ராமானுஜம்ஜி



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 19 | செப்டம்பர் 2013 | கானம்: 2

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**


**இந்த இதழில் ...**

மதுரமான மஹனீயர் - 210 — 03
ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் — 11
பாகவதபழம் -ஸ்கந்தம்2 -பு4 — 14
சொற்களை அறிவோம்! — 17
ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுரைகளிலிருந்து — 19
ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் — 26
சம்ஸ்க்ருதி சென்னை 2013 — 31
பாலகர்களுக்கு ஒரு கதை — 33
பிருந்தாவனமும் நந்தகுமாரனும் — 38
மாலே மணிவண்ணா — 40
அப்பாலுக்கு அப்பால் — 42

**பகைவனிடம் நட்பு பாராட்டுவதோ, நண்பனை பகைத்துக் கொண்டு கோபம் கொள்வதோ, புத்திசாலியின் செயல் ஆகாது.**

**- விதுர நீதி**

முன் அட்டை - மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனுடன் ஸ்ரீஸ்வாமிஜி
பின் அட்டை - 25.8.2013 அன்று சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற நகரசங்கீர்த்தனத்தில் ஸ்ரீஸ்வாமிஜி



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# கண்ணன் மேல் ஒரு பாடல்

கண்ணனிவன் வருவானோ! கனியமுதம் தருவானோ!
காத்திருந்து காத்திருந்து கண்ணிரண்டும் பூத்ததடீ!
தலைவாரி பூச்சூடி கண்ணிரண்டும் மையெழுதி
கார்மேக கண்ணனிவன் கனவில் மட்டும் வருவான்டி!

வாசமலர் பறித்து வைத்தேன்; வாசலில் கோலமிட்டேன்;
வடிவாய் நகையணிந்தேன்!
வண்ணப் பட்டுடுத்தி மன்னவன் வர நான் நின்றேன்!

அழகன் வருவான்டி! ஆசை முத்தம் தருவான்டி!
கனவில் மட்டும் வருபவன் நனவிலும் வருவான்டி!
அவலமுதம் பண்ணி வைத்தேன்! ஆசையாய் சீடை வைத்தேன்!
வெல்லத்தேன் வைத்தேன்! வெண்ணையும் கடைந்து வைத்தேன்!
கையில் கன்னம் வைத்தேன்! வழி மேல் விழி வைத்தேன்!

காலை பகலாகி, அந்தி இரவாகி
நிஜமும் நிழலாகி கனவாகி போனதடீ!
ஒரு யுகமும் ஆனதடீ! ஆசை மண்ணாகி போனதடீ!
பாவியவள் காத்திருந்து கல்லாகி போனேன்டீ!

கல்லான எந்தன் மீது கண்ணன் வந்து அமர்ந்தான்டீ!
கொஞ்சும் குழல் கொண்டு வந்து குழலமுதம் தந்தான்டீ!
கல்லான எந்தன் நெஞ்சும் நெக்குருகி போனதடீ!
கண்ணீரும் மடையாகி வெள்ளம் போலானதடீ!

பாவிநான் நீராகி ஓடைவழி போவேனா!
கண்ணனைக் கைவிட்டுக் கடல் நோக்கிப் போவேனா!
கண்ணா! கண்ணா! என்று கதறிவழி போகையிலே
கருநீல சமுத்திரமாய் கண்ணன் அங்கே காட்சி தந்தான்!

-உமாலட்சுமி
சென்னை-83



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# மதுரமான மஹனீயர் – 210

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

"பிறந்து விட்டோம் என்பதற்காக நாம் வாழ்கிறோம். மஹான்களோ வாழ்வதற்காக பிறக்கின்றனர்" என்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சொல்வதுண்டு. வாழ்வில், நாம் எதை குறிக்கோள் என கொண்டோமோ, அதை அடைய, பல முயற்சிகளையும் தியாகத்தையும் செய்து இருப்போம். பலரது வாழ்க்கை என்பது படித்து, வேலை செய்து, ஒரு அழகான அன்பான குடும்பத்தில், குறித்த வெற்றிகளை பெற்று வாழ்வது என்பதில் அடங்கி விடும். வாழ்வின் பல முக்கிய குறிக்கோள்கள் நிறைவேறும் தருணங்களை ஒருவர் திருப்புமுனை என நினைக்கலாம். ஆனால் குருநாதரின் பிரதம தரிசனமானது, எப்பொழுது ஒருவர் வாழ்வில் ஏற்படுகிறதோ, அதுவே வாழ்வின் பெரிய திருப்புமுனையாக அமைந்தது என்பதை பின்னர் ஒருவர் புரிந்து கொள்கிறார். அப்படி மஹான்களின் பிறப்பானது, பலரது வாழ்க்கைக்கு ஒரு திருப்பு முனையாகவும், ஒளி தருவதாகவும் அமைகிறது.

கடவுளின் காரணமற்ற கருணையினால்தான், ஒருவருக்கு சத்குருவின் தரிசனம் கிடைக்கிறது. சத்குருவின் அருட்பார்வை கிடைத்தவுடனேயே ஒருவரின் வாழ்க்கை மாற ஆரம்பித்து விடுகிறது. அதுவுமே கூட ஒருவருக்கு தெரியாமல் நடக்கிறது. சிறிது காலத்திற்கு பிறகு பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். அது எப்படி இருக்கும் என்றால், சத்குருநாதரின் தரிசனத்திற்கு முந்தைய வாழ்க்கை, பிந்தைய வாழ்க்கை என்று பிரித்து விடலாம். அப்படி ஒரு மாற்றத்தை, குருநாதரின் அருள்விளையாடல் செய்து விடுகிறது. அப்படி அனுக்ரஹம் செய்யப்பட்ட நமது சத்சங்க குடும்பங்களில் ஒன்று, திரு.குமாரஸ்வாமி அவர்களின் குடும்பம்.

இன்ஷுரன்ஸ் துறையில் தனிப்பட்ட சர்வேயராக வேலைபார்த்து வந்தார் இவர். இவரது துணைவியார் ஸ்ரீமதி அனுராதா ஒரு பள்ளி ஆசிரியராக இருந்தார். கிரிஜா, ஜனனி,



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

பூர்ணிமா என மூன்று பெண் குழந்தைகள். கிரிஜா அவர்களுக்கு, குருநாதரின் தரிசனத்திற்கு முன்பே, திருமணம் ஆகி இருந்தது. குமாரி ஜனனி, மெட்ராஸ் யூனிவர்சிடியில், சமஸ்கிருதம் படித்து வந்தார். குமாரி பூர்ணிமா, ஒரு ஐ.டி. பொறியியல் துறையில், வேலை பார்த்து வந்தார். 2000வது வருட ஆரம்பத்தில், திரு.குமாரஸ்வாமி, உறவினர் ஒருவரின் வீட்டில், மதுரமுரளியின் 1995ஆம் ஆண்டு முதற்பிரதியை பார்த்திருந்தார். அதிலிருந்த கட்டுரைகள் அவரை மிகவும் ஈர்த்திருந்தது. அதுவே, அவருக்கு குருநாதரின் முதற் சம்பந்தம் என்றும் சொல்லலாம். ஆனாலும், அவருக்கு உடனடியாக குருநாதரின் தரிசனம் கிடைக்கவில்லை. ஒரு மலரின் மொட்டானது தக்க காலத்தில்தானே மலரும்? வலிந்து மலர வைக்க முடியாதல்லவா? கடவுளின் திருவுள்ளம் எப்பொழுது வாய்க்கிறதோ, அப்பொழுதுதானே குருநாதரின் தரிசனம் கிடைக்கிறது.

நமது சத்சங்கத்தில் மிக முக்கியமான அன்பர்களுள் ஒருவரான ஸ்ரீஜானகிராமன் அவர்களின் பெண், குமாரி.சங்கீதா ஜானகிராமனும், ஜனனி படித்து வந்த கல்லூரியில், படித்து வந்தார். அவர் மூலமாக, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை பற்றி கேள்விப்பட்டு ஜனனி, ப்ரேமிக பவனத்தில் குருநாதரை, நவம்பர் 2000த்தில் வந்து தரிசித்தார். ஜனனிக்கு, குருநாதரின் முதல் தரிசனமே மறக்க முடியாததாக இருந்திருக்கிறது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஜனனியையும் அவரது பெற்றோரையும் பற்றி விசாரித்தார்கள். மேலும் ரமண மஹரிஷிகள் அருளிய "உபதேச உந்தியார்" குறித்து, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வழங்கியிருந்த விளக்கமான அருளுரையின் ஒலிப்பதிவு கேசட்டையும், ஜனனியிடம் தந்து "இதை கேள். சத்சங்கத்திற்கு அடிக்கடி வரவும்" என்றார்கள். அதுவே ஜனனிக்கு கிடைத்த முதற்பிரசாதம் எனலாம்.

அந்த கேசட்டில் இருந்த அருளுரையை, குடும்பத்தார் அனைவரும் கேட்டனர். அப்பொழுது திரு.குமாரஸ்வாமி குடும்பத்தார், மிக வித்யாசமான ஒரு அருளுரையை கேட்கிறோம் என்று உணர்ந்தனர். அனைவருக்கும் அந்த அருளுரை ஏகமாய் பிடித்து போனது. ஒருவாரத்திற்குள் குடும்பம் முழுவதுமே, குருநாதரின் தரிசனத்திற்கு வந்திருந்தனர்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

தொடர்ந்து ப்ரேமிக பவன சத்சங்கங்களில், தவறாமல் கலந்து கொண்டார் திரு.குமாரஸ்வாமி. குமாரஸ்வாமி அவர்கள் ராமகிருஷ்ணரின் நூல்களை படிப்பது வழக்கம். அவரின் உபதேச மொழிகளை பதிவு செய்த "மா", ராமகிருஷ்ணரின் சத்சங்கத்தை ஒரு ஆனந்த சந்தை என தத்ரூபமாக வர்ணித்திருப்பார். குமாரஸ்வாமி ப்ரேமிக பவனத்திற்கு வந்த காலத்திலே, சில அன்பர்கள் இருந்தாலுமே கூட, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், எந்நேரமும் கீதை, வேதாந்த கிரந்தங்கள், பாகவதம் போன்றவை அருளுரைகள் நிகழ்த்தி வருவதும், ஆனந்தமாக பஜனை செய்வதையும் கண்டிருக்கிறார். அது தமக்கு, ராமகிருஷ்ணரின் வாழ்வை நினைவூட்டியது என்று என்னிடம் குமாரஸ்வாமி சொல்வதுண்டு. மேலும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளை கேட்பது, தமது உள்ளத்திலும் வாழ்விலும் பெரும் மாற்றத்தை கொண்டு வருவதையும், குருநாதரின் உபதேசமும் சங்கமும், தமது மனதை ஊடுருவி தொடுவதையும், நன்கு அனுபவித்து இருக்கிறார் அவர்.

உதாரணமாக சத்சங்கத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஒருமுறை, காசியாத்திரை சமயம், ஒவ்வொருவரையும் பார்த்து அவரவருக்கு பிடித்த வஸ்துவையோ அல்லது வேண்டாத பழக்கத்தையோ விட சொல்லி கொண்டிருந்தார். அப்பொழுது திரு.குமாரஸ்வாமியும் இருந்தார். அவருக்கு அடிக்கடி பாக்கு போட்டு கொள்ளும் பழக்கம் இருந்தது. அவர் தன் மனதில் "என்னிடம் கேட்கும்போது பாக்கு போட்டு கொள்வதை நிறுத்தி விடுகிறேன்" என்று கூற முடிவு செய்து இருக்கிறார். ஆனால் குருநாதர் அவரிடம் ஒன்றுமே கேட்காமல் விட்டு விட்டார். ஆனால் மறுநாளிலிருந்து முற்றிலும் அப்பழக்கத்திலிருந்து அவர் விடுபட்டார். வெளிப்படையாக சொல்லாவிடினும், குருநாதரின் சன்னதி விசேஷத்தினால், அத்தீர்மானம் உடனே நிறைவேறியது. இல்லாவிடில், ஒரு பழக்கத்தை எளிதில் விட முடியுமா? அனுபவஸ்தருக்குத்தானே அந்த மாற்றம் நிகழ்ந்த விதம் புரியும்!

மகிழ்ச்சியான இடத்திற்கு அடிக்கடி சென்று வரும் ஒருவருக்கு மகிழ்வும், துக்கமான இடத்திற்கு சென்று வருவோருக்கு துக்கமும், மனதில் நிலவுவது இயற்கைதானே?



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

அப்படியே, சத்சங்கத்திற்கு அடிக்கடி செல்லும் ஒருவரின் மனதில் பக்தி, வைராக்கியம், ஞானம் போன்றவை உதிக்க ஆரம்பிக்கும். அங்குதானே, பக்தர்களுடன் சேர்ந்து பகவானை அனுபவிக்க கூடிய வாய்ப்பும் கிடைக்கிறது. குமாரஸ்வாமிக்கு அப்படித்தான், ஸ்ரீமதி.ஜெயந்தி ஜானகிராமன், ஸ்ரீமதி.நிர்மலாகிரி, திரு.கல்யாண கிருஷ்ணன்(கேகே) ஆகியோரின் நட்பு கிடைத்தது. அவருக்கு ஒருமுறை திருப்பதிக்கு ஸ்ரீமதி.ஜெயந்திஜானகிராமனுடனும், திரு.கேகேவுடனும் செல்லும் வாய்ப்பு கிட்டியது. அப்பொழுது ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமனும், திரு.கேகேவும், குருநாதருடனான தங்களது பல அனுபவங்களை சுமார் மூன்று மணி நேரம் தொடர்ந்து பகிர்ந்து கொண்டார்கள். சாதாரணமாக அரசியல், சினிமா, உலக விஷயம் பற்றி பேச்சு என்பதுதான் குமாரஸ்வாமிக்கும், எல்லோரையும் போல் அதுவரை அனுபவமாய் இருந்தது. ஆனால், இப்படி இடைவிடாத சத்சங்கமான விஷயம், அதுவரை அவர் அனுபவித்திராதது. அவருக்கு அது ஆனந்தத்தை அளித்து, என்றும் ஞாபகத்தில் இருக்குமாறு அமைந்து விட்டது. பல மஹான்களை பற்றி கேள்விப்பட்டும், பல உபன்யாசங்களை கேட்டும் இருந்தவர் குமாரஸ்வாமி. இருந்தாலும், நேரடியான ஒரு அனுபவத்தை தாம் பெற்று வருகிறோம் என்று நன்கு உணர்ந்தார் அவர்.

ஒவ்வொருவர் வாழ்விலும் அமைவது போல், குமாரஸ்வாமி வாழ்விலும் குருநாதர் அருளிய சம்பவங்கள் பல உண்டு. 2006இல் அவரது வயதான தாயாருக்கு அடிபட்டு அவருடன் யாராவது கூடவே இருக்க வேண்டிய அவசியம் ஏற் பட்டது. 2011இல் மறுபடி அவர் தாயாருக்கு அடிபட்டு நினைவும் தப்பி விட்டது. அடிபட்ட உடன் பார்த்த மருத்துவர் ஒருவர், தாயார் பிழைக்க மாட்டார் என்றே சொல்லி விட்டார். உடனே குமாரஸ்வாமி எனக்கு போன் செய்து, தம் தாயாரை குறித்த விவரங்களை தெரிவித்து, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம், தமது பிரார்த்தனையையும் தெரிவிக்க சொன்னார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும், நம் சத்சங்க அன்பர்களுள் ஒருவரான Dr.வெங்கடேசனை பார்க்க சொன்னார்கள். குமாரஸ்வாமி தாயாருக்கு நினைவில்லையே தவிர, உடலில் பிற செயல்பாடுகள் சரியாக இருப்பதால், ஒரு மருத்துவமனையில்



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

சேர்த்து சிகிச்சை அளிக்கலாம் என்றார் Dr.வெங்கடேசன். அப்படியே மருத்துவமனை ஒன்றில் சேர்த்தனர். ஆச்சரியமான சம்பவம் ஒன்று அங்கு நடந்தது. குமாரஸ்வாமியின் தாயார், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை ஒரே ஒருமுறைதான் ஆஸ்ரமத்தில் தரிசித்து இருக்கிறார். அவர் தாயார் சாதாரணமாக சத்சங்கங்களில் கலந்து கொண்டு, அதிகமாக கீர்த்தனமும் செய்தது கிடையாது. ஆனால் மருத்துவமனையில் கண்களை மூடி நினைவிழந்து இருக்கையில், மிக உரக்க "ஹரே ராம .." மஹாமந்திரத்தை இரண்டு மணி நேரம் சொல்லி இருக்கிறார். குமாரஸ்வாமியும் அவரது சகோதரியும் பன்முறை "அம்மா அம்மா" என்று கூப்பிட்டும் கூட அவருக்கு நினைவு வரவில்லை. ஒருவரையும் அவர் நினைவு கூறவும் இல்லை. ஆனால், எவரது முயற்சியும் இல்லாமல், நாமம் மட்டும் சொல்லி இருக்கிறார். இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம் அல்லவா? குருநாதரின் கிருபைதான் இது என்று, எவருக்கும் சொல்லாமலேயே புரியக்கூடிய விஷயம்தான்!

தாயார் சில நாட்களுக்கு பின், வீடு திரும்பினார். ஆனால் படுத்த படுக்கையாகி விட்டார். சுமார் ஒரு வருடம் கழித்து, 2012இல் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே வீடு தேடி வந்து, தாயாருக்கு தரிசனம் தந்து இருக்கிறார். ஒவ்வொருவரின் மனதினுள்ளும் என்ன இருக்கிறது என்று குருநாதர்தானே அறிவார்? ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், குமாரஸ்வாமி வீட்டிற்கு சென்றபொழுது, தாயார் பேசும் நிலையில் இல்லை. குருநாதர், அனைவரையும் ஆத்ம நிவேதனம் சொல்ல சொல்லி இருக்கிறார்கள். பிறகு குமாரஸ்வாமியிடம் "உன் அம்மாவிற்கு பிள்ளையார் மேல் ஏதோ வேண்டுதல் பாக்கி இருக்கிறது. பிள்ளையாரை கொண்டு வா" என்று பணித்திருக்கிறார்கள். பூஜை அறையில் இருந்த சிறு பிள்ளையார் விக்ரஹத்தை எடுத்து தாயார் கையில் கொடுக்கவும், ஸ்ரீஸ்வாமிஜி சொன்னார்கள். பின் விபூதி இட்டு விட்டு "சில நாட்களில் இறைவனடி சேர்வார்" என்று சொல்லி சென்றார்கள். அது அப்படியே நிகழ்ந்தது.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தமக்கு "தேடாது உற்ற திரு அருட்நிதி" ஆவார் என்று குமாரஸ்வாமி சொல்வார். எத்தனையோ பேருக்கு, தேடியும் கிடைக்காதவர்தானே சத்குருநாதர்? 2001இல்



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே, தாமாகவே குமாரஸ்வாமிக்கும் அவரது மனைவிக்கும் நாம உபதேசம் செய்தருளினார்கள். 2002இல் குமாரஸ்வாமியின் மனைவி சென்னையில் வேலைபார்த்து வந்த பள்ளியில், அவரை மஹாராஷ்டிராவிலுள்ள ஜல்கானிற்கு மாற்றம் செய்தனர். குடும்பத்தை விட்டு சட்டென அந்த வயதில், அங்கே எப்படி செல்ல முடியும்? அதனால் குடும்பத்திற்கு கஷ்டம் என எடுத்து சொல்லி, மாற்றல் வேண்டாம் என கேட்டிருக்கிறார். ஆனால், இங்குள்ள பள்ளி பிரின்சிபால் அதை மதிக்கவே இல்லை. கோர்ட்டுக்கு சென்று ஸ்டே ஆர்டர் வாங்க முயற்சித்தார் குமாரஸ்வாமி. பள்ளி பிரின்சிபால் அதையும் அலட்சியம் செய்து, மிகவும் தொந்திரவும் தந்து வந்தார். கோர்ட்டில் மனு வெற்றி பெறாததால், இங்கே வாலண்டரி ரிடையர்மெண்ட்டுக்கும் (**VRS**) மனு போட முடியவில்லை. பின்னர்தான், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் தமது கஷ்டத்தை சொன்னார் குமாரஸ்வாமி. குருநாதரின் அனுமதியுடன், ஜல்கானுக்கு சென்று சேர்ந்து, **VRS** ஸுக்கு மனு போடுவது என்று முடிவாகியது. அப்படியே வேலையில் போய் சேர்ந்தார். ஆனால் ஒரு அதிசயம் பாருங்கள். ஜல்கான் போய், பள்ளியில் சேர்ந்த அன்றே, **VRS** அப்ளிகேஷன் ஒப்புக்கொள்ளப்பட்டது. அன்றே ரிலீவும் ஆனார். அவருக்கு முழுமையான **Benefits**ஸும் கிடைத்தது. எல்லாம் ஒரே நாளில் நடந்ததுதான் குறிப்பிடத்தக்கது. முன்னர் மிகுந்த மனதிற்கு கஷ்டத்தை கொடுத்த அதே விஷயம், ஸ்ரீஸ்வாமிஜியின் அருளால்தான், எந்த விதமான கஷ்டமும் இல்லாமல், சுலபமாக முடிந்தது என குமாரஸ்வாமி அழுத்தம் திருத்தமாக சொல்கிறார்.

ஒருவருக்கு, எது வேண்டுமானாலும் கிடைத்து விடும். ஆனால் நிம்மதி என்பது அத்துனை சுலபமன்று. அதை குருநாதரின் சன்னதி தருவது போல் வேறெதுவும் தராது. குமாரஸ்வாமியின் சகோதரி மாலதி ஒரு கட்டத்தில், மிகுந்த துயரத்தில் ஹைதராபாத்திலிருந்து சென்னை வந்தார். குருநாதரை பார்த்த மாத்திரத்தில், அவருக்கு மிக தேவையாய் இருந்த, அவர் தேடிய மன சாந்தி கிடைத்தது! சகோதரி மகன் ஸ்ரீனிவாசனும் இன்று நாமத்வார் அலுவலகத்தில், கைங்கரியம் செய்து வருகிறார். அமெரிக்காவிலிருந்த குமாரஸ்வாமியின் மூத்த



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

பெண்ணும் கணவரும், இந்தியாவுக்கு வர ஆசைப்பட்டனர். பல கம்பெனியில், இண்டர்வியூவில் பல படி கடந்தும், வேலை கிடைக்கவில்லை. குருநாதரிடம் பிரார்த்திக்க நல்ல வேலை ஒன்று பெங்களூரில் கிடைத்து, இன்று சௌக்யமாய் இருக்கின்றனர். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

குருநாதரை என்று தரிசித்தோமோ, அன்று முதல்தான், நம் வாழ்க்கை பற்றி அவர் அறிவார் என்று ஒருவர் நினைக்கலாம். ஆனால், நாம் தரிசனம் செய்யும் முன்னரே, நம்முடன் அவர் இருந்து அவர் நம்மை வழிகாட்டி வருகிறார். குமாரஸ்வாமி, ஒருநாள் கண்களை மூடி ப்ரேமிகபவனத்தில் அமர்ந்திருக்கையில், முன்னால் யாரோ நிற்பது போல் நிழலாடியது. கண்ணை திறந்து பார்த்தால் ஸ்ரீஸ்வாமிஜி! சட்டென குமாரஸ்வாமி கைகளில் ஒரு ருத்ராக்ஷ மாலையையும் ஸ்படிக மாலையையும் அவர் போட்டார். அது குமாரஸ்வாமிக்கு ஆச்சரியம்! ஏனெனில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனத்திற்கு முன், அவற்றையே அவர் அணிந்து வந்தாலும், ஒருமுறையேனும் அதை குருநாதரிடம் தெரிவித்ததே இல்லை! ஆனால் தனக்கு தெரியும் என்று குருநாதர் சொல்லாமல், சொல்லி இருக்கிறார்!

திரு.குமாரஸ்வாமிக்கே ஒருமுறை ப்ராஸ்டேட் பிரச்னை ஏற்பட்டு ஆபரேஷன் செய்யும்படியும், பிறிதொருமுறை பி.பி. அதிகமாகி பெரிதாக வியர்த்து கொட்டியும், கஷ்டமாய் போனது. இருமுறையும், அவரை மருத்துவமனையில் அட்மிட் செய்ய வேண்டி வந்தது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் எத்துனை அன்பர்களை தினம் தினம் சந்திக்கிறார்? மேலும் அவர் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஒப்பு கொண்டிருப்பார். அது வெளியூர்களிலும் இருக்கும். தவிரவும் ஆஸ்ரம சத்சங்க நிகழ்ச்சிகள், வேலைகள் என்று இருந்து கொண்டே இருக்கும். இருப்பினும் இருமுறையும் குமாரஸ்வாமியை நேரில் வந்து பார்த்து பிரசாதம் தந்தருளினார். இதை பற்றி குமாரஸ்வாமி சொல்கையில், "ஒருமகன் இருந்தால் கூட, இப்படி எனக்கு செய்யமுடியாது என்பதில் சந்தேகம் இல்லை" என உளமார சொல்வார். குருவின் அன்பு அப்படிப்பட்டது. ஒருமுறை குமாரஸ்வாமி குருநாதரிடம் "வேலையை விட்டு விடட்டுமா" என்று கேட்டு இருக்கிறார். குருநாதர் சிரித்து கொண்டே "எல்லோரும் வேலை வேண்டும் என்பர். என்னிடம்



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

வருபவரோ வேலை வேண்டாம் வேண்டாம்; உங்களுடனேயே, குரு கைங்கரியத்தில் இருந்து விடுகிறோம் என்கின்றனர்" என்று ஹாஸ்யமாக பதில் தந்து விட்டார்.

"மூகம் கரோதி வாசாலம்" - ஊமையை கூட பேச வைக்குமாம் குருநாதரின் திருவருள் என்பர். பொறியியல் பட்டப்படிப்பு முடித்திருந்த குமாரஸ்வாமியின் மகள், பூர்ணிமாவை ஒருமுறை ஸ்ரீஸ்வாமிஜி பாகவதம் பிரவசனம் செய்ய சொன்னார்கள். அன்றே அவரும் சொன்னார். மறுநாளிலிருந்து அவரை முழுவதுமாக, பாகவத பாராயணம், பிரவசனத்தில் ஈடுபடுத்தினார் ஸ்ரீஸ்வாமிஜி. இன்று முழுவதுமாக, குருநாதரின் கைங்கரியத்தில் ஈடுபட்டு இருக்கிறார் குமாரி பூர்ணிமா.


இப்படி தனது குடும்பத்தையும் தனது பொறுப்புகளையும், முழுவதுமாக, தானே சுமந்து கொண்டு நடத்தி செல்லும் குருவருளின் மாண்பை நினைத்து வியக்கிறார் குமாரஸ்வாமி.

## (Youth Leadership Workshop) தலைமையாளர்களாக்க பயிற்சி

குளோபல் ஆர்கனைசேஷன் பார் டிவினிடி இந்தியா டிரஸ்டு சார்பாக, சென்னை மாம்பலம் பாணிக்ரஹா மண்டபத்தில் **ஆகஸ்டு 4** அன்று, மாணவ இளைய செல்வங்களுக்கு தலைமைப்பயிற்சி அளிக்கப்பட்டது. நான்கு மணி நேரம் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், **Leadership Communication** என்பதே முக்கிய பயிற்சியாக அமைந்தது. பல பள்ளிகளிலிருந்து **54** இளைஞர்கள் கலந்து கொண்ட இதில், திரு.சிவசுப்ரமணியன் G.O.D செயல்பாடுகள் குறித்து பேசினார். **2012** பயிற்சியில் கற்று தரப்பட்டதன் சுருக்கத்தை ராமானுஜம்ஜி எடுத்துரைத்தார். திரு.சனத்குமார் **'Making observation and Expressing feelings'** குறித்தும் , திரு.விக்னேஷ் **'Expressing needs and making requests'** குறித்தும் பேசினர். ராமானுஜம்ஜி மேற்கண்டதன் சாராம்ஸத்தை நடைமுறை வாழ்க்கையிலிருந்து மேற்கோள்கள் காட்டி பேசினார். கலந்து கொண்டோர், இவற்றை வாழ்வில் பயன்படுத்தி பயனடைவோமென்று வெகுவாக தெரிவித்தனர்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: ஒவ்வொரு ஜீவனும், அதனதன் கர்மவினைப்படியே பிறக்கிறது. மேலும், அதனதன் கர்மவினைப்படியே அதனதன் வாழ்க்கை அமைகிறது என்கின்றனர். இது உண்மை என்றால், பித்ருகர்மாக்களை செய்ய வேண்டிய அவசியம் என்ன? ஒரு ஜீவனின் பிறப்பிற்கு, பெற்றோர்கள் கருவிகள் மட்டும்தானே?

பதில்: அவனன்றி ஓரணுவும் அசையாது என்பது முழுவதும் உண்மைதான். அனைத்தும் இறைவனின் விருப்பத்திற்கும் கட்டளைக்கும் உட்பட்டே நடக்கிறது. இருப்பினும் பேருந்தில் பிரயாணம் செய்கையில், நமக்கு ஒருவர் உட்கார இடமளித்தால், அவருக்கு நமது நன்றியை மறக்காமல் தெரிவிக்கிறோம் அல்லவா? அப்பொழுது "எல்லாம் கடவுள் செயல்" என்று இருக்கிறோமா என்ன? அதுபோல்தான், நமக்கு வாழ்வளித்த நம் பெற்றோர்களுக்கும், நாம் மறக்காமல் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

கேள்வி: வாழ்க்கையின் லட்சியம் என்ன என்று, ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளாததற்கு காரணம் என்ன?

பதில்: விளக்கில் எரியும் தீபம் மேல் நோக்கி எரிகிறது. நீரானது பள்ளத்தை நோக்கி கீழே ஓடுகிறது. குழந்தைக்கு கேளிக்கையும் விளையாட்டும் பிடிக்கும். இவை எல்லாம் இயற்கை. கடவுளின் நியமம் இப்படி இருக்கிறது. அதுபோல் பல்லாயிரக்கணக்கான பிறவிகளில், நாம் வெளிமுகமான விஷயங்களிலேயே, நமது கவனத்தையும் ஆர்வத்தையும் செலுத்தி வந்துள்ளோம். இதை மாற்றி, நம் கவனத்தை உள்முகமாக்குவது, அவ்வளவு எளிதல்ல. வாழ்க்கையின் லட்சியம் என்பது ஆன்மானுபவத்திலேயே நின்று முக்தி பெறுவதுதான். அது என்ன என்பதை பூரணமாக



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

அறிந்ததோடு மட்டுமல்லாமல், அதை அனுபவத்தில் அடைந்த ஒருவரை குருவாக அடைந்தால் மட்டுமே, நாம் வாழ்க்கையின் லட்சியம் என்ன என்பதை, சரியாக புரிந்து கொள்வோம்.

கேள்வி: கடவுளின் கிருபை நமக்கு இருக்கிறது என்பதை எப்படி அறிவது? அதற்கு ஏதும் அடையாளங்கள் உள்ளனவா? பகவானின் கிருபையில்லாமல், செய்யப்படும் முயற்சிகள் எல்லாம் வீண் என்பதால், முயற்சி செய்வதினால் வரும் பிரயோஜனம் என்ன?

பதில்: தானியம் வயலில் விளைவதற்கு விவசாயி ஒருவரின் உழைப்பும், கடவுளின் கிருபையான மழையும் இன்றியமையாதது. மழை சரியான காலத்தில் இல்லை எனில், உழுதாலும் விதை விதைத்தாலும், பயிர் வராமல் வீணாகத்தான் போகும். அறுவடை எனும் பலன் ஒன்றும் இருக்காது. உழைப்பும் கிருபையும் சேர்ந்தால் பலன் நிச்சயம். அப்படி எனில் கடவுளின் கிருபை இருக்கிறது என்பதை எப்படி அறிவது? ஆன்மீக சாதனைகளை நாம் செய்கிறோம் என்று நினைக்கும் வரையில், ஒருவரால் சாதனை மூலமாக கடவுளை அடைய முடியாது. ஆனால், ஒருவர் தான் செய்யும் சாதனைகளும் கடவுளின் அருளாலேயே செய்யப்படுகின்றது என்பதை உணர்ந்து வருவாரானால், அவரது முயற்சிகள் வீணாக போவதில்லை என்பது திண்ணம். கடவுளின் அருளினால்தான், கடவுளை அடைய ஆசைப்படுகிறோம் என்று திண்ணமாக உணர்வதுதான், கடவுளின் கிருபை இருப்பதற்கான அறிகுறி.

கேள்வி: இக்காலத்தில் இளம் வயதினருக்கு பொழுது போக்கு அம்சங்களிலும், போக்ய வஸ்துக்களிலும் அதிக மோகம் இருப்பதை காண்கிறோம். நல்ல குடும்பத்தில் இருப்பவர்களும் கூட, இப்படி இருப்பதை காண்கிறோம். இப்படிப்பட்ட இளைய சமுதாயத்தினர், கெட்ட பழக்கங்களிலிருந்து திருந்தி, கடவுளை அடைய என்ன வழி?

பதில்: பெரிய மழையில், எல்லோருக்கும் வித்யாசமில்லாமல்



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

காய்ச்சல் பிடிக்கிறது அல்லவா? அப்படித்தான், இந்த கலிகாலத்தில் மக்களின் மனதில் கெட்ட எண்ணங்களும், தீய பழக்கங்களும் மலிந்து காணப்படும். ஆனால், கடவுள் கருணையினால் தன்னை அடைவதற்கு தீயோர், நல்லோர் என்று எந்த நியமங்களையும் விதிப்பது இல்லை. அவரை யாராலும் அடைய முடியும். அதற்கு சுலப எளிய வழி கோவில் வழிபாடு, சத்சங்கம் மற்றும் நாமகீர்த்தனமும்தான். சத்சங்கம் எனப்படுவது பாகவத பாராயணமும், பகவானின் கதைகளை பக்தர்களின் சரித்திரங்களை சிரவணம் செய்வதும்தான். கோவில் வழிபாடும், சத்சங்கமும் ஒருவருக்கு வாய்க்கவில்லை என்றாலும் கூட, நாமகீர்த்தனம் ஒன்று மட்டுமே கூட, ஒருவருக்கு இறைவனின் திருவடியை பெற்று தர வல்லது என்பதில் ஐயமே இல்லை!

கேள்வி: எனது நண்பன் ஒருவன் நாமகீர்த்தனமும் பக்தியும், வேறொரு ஜன்மத்தில் கொண்டு விடும். அதில் யோகமோ வேதாந்த விசாரமோ செய்து, அதன் மூலம்தான் முக்தி அடைய வேண்டும் என்று கூறுகிறான். எனக்கோ சரணாகதியிலும், நாமகீர்த்தனத்திலும் நம்பிக்கை இருக்கிறது. எது சரி?

பதில்: கடவுள், பிறவி, பாபம், புண்யம், மரணத்திற்கு பின்னான வாழ்க்கை ஆகிய விஷயங்களில், சாஸ்திரம் என்ன சொல்கிறது என்றுதான் பார்க்க வேண்டும். அதன் முடிவே இறுதியானது. நமது அறிவின் முடிவோ அல்லது உங்கள் நண்பரின் அபிப்ராயமோ, இவ்விஷயங்களில் ஏற்றுக்கொள்ளத்தக்கதே அல்ல. சாஸ்திரமோ, "ஒருவன் நாமகீர்த்தனம் மட்டும் செய்து வந்தாலே போதும், நிச்சயம் முக்தி பெறுவான்" என்று சொல்கிறது. எவ்வளவு சாதனைகளானாலும், கடவுளின் கிருபையின்றி செய்யப்படுமானால், அவை முக்தியை நிச்சயமாக தரவே தராது. நாமகீர்த்தனத்தினால் பகவான் மகிழ்கிறான். அப்படி மகிழ்வுறும் பகவான், ஒருநாள் கிருபையை பொழிந்து முக்தியை அருள்கிறான்.


PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 1

–ஸ்ரீஸ்வாமிஜி 4



பரீக்ஷித்திற்கு சுகபிரும்மம். "கட்வாங்கர் என்ற ராஜரிஷி ஒருவர் இருந்தார். அவருக்கு தனக்கு இன்னும் ஒரு முகூர்த்தம்தான் ஆயுள் உள்ளது என்பதைத் தெரிந்து கொண்டார். அந்த ஒரு முகூர்த்த காலத்திற்குள் அவர் ஞானத்தை அடைந்தார் என்பதை தெரிந்துகொள். கவலைப்படாதே! உனக்கோ இன்னும் ஏழு நாட்கள் இருக்கின்றதே!" என்று உற்சாகப்படுத்துகின்றார்.

அந்த ஏழு நாட்களுக்குள் பரலோகத்திற்கு வேண்டியதை எல்லாம் சம்பாதித்துக் கொள் என்கின்றார். மனிதன், வாழ்க்கையில் முடிவுகாலம் வரை, குடும்பத்திலேயே உழன்று கொண்டிருக்கக்கூடாது. ஓரளவு கடமைகளை முடித்தவுடன் பயமற்றவனாக ஆக வேண்டும். தீரனாக, மனைவி, மக்கள், சொத்து, எல்லாவற்றிலும் உள்ள ஆசையை விடவேண்டும். வீட்டைத் துறந்துவிட வேண்டும். அதே ஊரில் இல்லாமல் வெகுதூரத்தில் உள்ள ஒரு க்ஷேத்திரத்திற்குச் சென்றுவிடவேண்டும். அந்த வயதிலாவது, பூரணமான பிரும்மச் சரியத்தை அப்யாஸம் செய்ய வேண்டும். எவ்வளவு புண்ய நதிகளில் நீராட முடியுமோ, அத்தனை புண்ணிய நதிகளில் நீராட வேண்டும். பிறகு மிகவும் பரிசுத்தமான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். பரிசுத்தமான இடம் என்பதற்கு இறைவனுடைய சாந்நித்தியமுள்ள இடம் என்பதுதான் சரியான பொருளாக இருக்கும். அந்த இடம் பரிசுத்தமானதாக இருந்தால் மட்டும் போதாது. எல்லாவிதத்திலும் தனிமையாக இருக்க வேண்டும். தர்பாசனம், மான்தோல், வஸ்திரம் இவைகளில் ஒன்றை ஆசனமாக கொண்டு அமரலாம். அல்லது இவைகளை அழகாக ஒன்றன் மீது ஒன்று



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

வைத்து உட்கார வேண்டும். நிமிர்ந்து உட்கார வேண்டும். சற்றும் கூன் போடக்கூடாது. பிராணனானது மூலாதாரத்தில் இருந்து கிளம்பி, தலையில் உள்ள ஸஹஸ்ராரம் வரையில் தடையில்லாமல் செல்லும்படி அமர வேண்டும். பிறகு அகார உகார மகாராதி ரூபமான பிரணவத்தை மனதில் ஆவ்ருத்தி செய்ய வேண்டும். ஓயாமல் பிராணாயாமம் பழக வேண்டும். ஆனால், ஆரம்பத்தில் அதிக நேரம் பிராணனை அடக்கக் கூடாது. சிறிது சிறிதாக நேரத்தை அதிகரித்துக் கொண்டு வரவேண்டும்.

பிராணாயாமம் செய்யும்பொழுதும் முழுமனதுடன் (Graceful) ஆக செய்ய வேண்டும். வெகு நாட்கள் பழக வேண்டும். அவசரப்படக்கூடாது. அப்படிச் செய்வதால், மனது சிறிது சிறிதாக அடங்கும். அப்படி அடங்கிய போதும், பிரணவத்தை மறக்காமல் மனதினால் ஜபித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஒருவனுடைய மனது என்ற கடிவாளத்தில் இந்திரியங்கள் என்ற ஐந்து குதிரைகள் கட்டப்பட்டுள்ளன. இவைகள் தறிகெட்டு ஓடும்பொழுது விவேகத்துடன் கூடிய புத்தி என்ற சாரதியால், இந்திரியங்கள் என்ற குதிரைகளை இழுத்துக் கட்ட வேண்டும். அந்த இந்திரியம் என்ற குதிரைகள், நம்முடைய பூர்வ ஜன்ம கர்ம வாசனைகளால், தலை தெறித்து ஓடப்பார்க்கும். அதை இழுத்து, பகவானுடைய உருவத்தில் நிறுத்த வேண்டும்.

மேலும், பகவானை தியானம் செய்வது பற்றி வர்ணிக்கின்றார். ஓடுகின்ற மனதை மீண்டும் மீண்டும் நிறுத்த வேண்டும். அதில் ஸ்தாபித்த பகவானின் திவ்யமங்கள விக்ரஹத்தை பாதாதி கேசமாகவோ, கேசாதி பாதமாகவோ தியானிக்க வேண்டும். ஒவ்வொரு அவயவத்தையும் தியானம் செய்ய வேண்டும். அதே சமயத்தில் முழு உருவத்தையும் மறக்கவும் கூடாது. வேறு ஒரு சிந்தனையும் இல்லாமல், இந்த பகவத் ரூபத்தை மட்டுமே எண்ணும் அளவிற்கு, மனதில் தியானம் செய்ய வேண்டும். ஒரு தங்க விக்ரஹத்தை முழுங்கிவிட்டால், அது நம் ஹ்ருதயத்தில் எப்படி இருக்குமோ, அதுபோல் நாம் தியானம் செய்யும் திவ்யமங்கள விக்ரஹம் நமது ஹ்ருதயத்தில் தெரிய வேண்டும். இதனால் அடங்கிய மனம் முழுவதாக சாந்தமாகிவிடும். இந்த சாந்திதான் பரமபதம். அங்கே மனது முழுவதும்


PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

அடங்கிவிடுகிறது. ரஜஸ் தமஸ் போன்ற குணங்களினால் அலைக் கழிக்கப்படும் இம்மனதை, தீரனான ஒருவன் அடக்க வேண்டும். இப்படி ஒடுக்குவதாலேயே மனதின் அழுக்குகள் எல்லாம் நீங்கிவிடும். இந்த நிலையில் மனது சுத்த ஸாத்வீகத்தை அடையும். அந்த மங்களை விக்ரஹத்தினுடைய தியானம் ஸித்தித்ததும், ஒருவனுக்கு மிக விரைவிலேயே பக்தி லக்ஷணங்கள் ஏற்பட்டு விடுகின்றது.

தியானத்தை பற்றி இவ்வாறெல்லாம் எடுத்து கூறியதும், பரீக்ஷித் சுகரிடம், "நீங்கள் மனதை ஒரே ரூபத்தில் நிற்கச் செய்ய வேண்டும் என்று கூறுகிறீர்கள். எந்த ரூபத்தில் அவ்வாறு நிறுத்த வேண்டும்? எப்படி மனதை அடக்கினால் எனக்கு சீக்கிரத்தில் சித்த சுத்தி ஏற்பட்டு பகவத் தரிசனம் ஏற்படும்?" என்று கேட்கின்றார். இதற்குப் பதில் கூறும் விதமாக ஸ்ரீசுகர், விராட்புருஷ தியானத்தை விளக்கமாகக் கூறுகிறார். (கனியும்)

ஒரு பக்தருக்கு, ஏதோ ஒரு தாங்க முடியாத கஷ்டம் வந்தது. அது நீங்க வேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்தித்து கொண்டே, மந்திர ஜபம் நிறைய செய்து வந்தார். அவருடைய கஷ்டமும் விலகியது. இவற்றை எல்லாம் அறிந்திருந்த அவருடைய நெருங்கிய நண்பர், அவரிடம் "கருணையுள்ள பகவான் தங்களுடைய கஷ்டங்களை எல்லாம் போக்கி விட்டார் பார்த்தீர்களா" என்றார். அதை கேட்ட பக்தர், "பகவான் எங்கே போக்கினான், நான் கஷ்டப்பட்டு மந்திரங்களை நிறைய ஜபம் செய்து, என் கஷ்டத்தை போக்கி கொண்டேன்" என்றார். ஒரு மனிதனுக்கு வந்த பெரிய கஷ்டம் விலகிய அந்த நிலையிலும் கூட, அவனால் "நான்" என்பதை விட முடியவில்லை என்பதுதான் உண்மை. மற்ற மனிதர்களால் துன்பம் விலகியது என்பதை கூட ஏற்று கொள்ளாமல் போகட்டும். இறைவனால்தான் தன் துன்பம் விலகியது என்பதை கூட, ஏற்று கொள்ள முடியவில்லை என்பதுதான், கடினமான உண்மை.

– குள்ள ஹரி



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# சத்சங்க சொற்களை அறிவோம்!

—நல்ல ஹரி

நாம் சத்சங்கங்களில் அடிக்கடி கதை கேட்கும்பொழுது ராகம், காமம், த்வேஷம், போன்ற வார்த்தைகளை சரளமாக உபயோகப்படுத்துவோம். அதனுடைய நேர்பொருளை கீழே பார்ப்போமா!

1. ஒரு ஆணிற்கு பெண்ணிடத்தும், பெண்ணிற்கு ஆணிடமும் ஏற்படும் விஷய சுகத்தில் உண்டாகும் எண்ணமே "ராகம்".

2. "காமம்" என்றால், பெரிய வீடு வேண்டும், உயர்ந்த ரக வாகனங்கள் வேண்டும், நல்ல உடைகள் வேண்டும், நிறைய ஆபரணங்கள், பணம் வேண்டும்; நிறைய சொத்து சேர்க்க வேண்டும் போன்ற ஆசைகளே "காமம்" எனப்படும்.

3. நமக்கு யாராவது தீங்கு செய்தால், செய்தவர்களுக்கு எவ்விதத்திலாவது கெடுதல் ஏற்பட வேண்டும் என்று நினைப்பதும், அதற்காக வேண்டுவதும், "துவேஷம்" எனப்படும்.

4. நாம் ஒரு பொருளை அடைய ஆசைப்படும்பொழுது, அதற்கு சிலர் தடை செய்யலாம். அப்படி தடை செய்பவர்களிடம் காட்டும் வெறுப்பு உணர்ச்சிக்கு "கோபம்" எனப் பெயர்.

5. தன்னிடம் உள்ள பொருள்களில் சிறிதளவு கூட ஒருவருக்கும் கொடுக்க கூடாது என்று நினைப்பது "லோபம்" ஆகும்.

6. ஒருவரிடம் நிறைய பொருளும், வசதியும், அதிகாரமும், பலமும் அல்லது இவைகளில் ஒன்று இருந்தாலும், அதனால் எதுதான் என்னால் செய்ய முடியாது என்று நினைப்பது, "மதம்" ஆகும்.

7. தன்னிடம் இருக்கும் பணத்தினால் எதை செய்ய தக்கது அல்லது எதை செய்ய கூடாது என்பதை அறியாமல், தன் மனம் போனபடி வாழ்வது "மோஹம்" எனப்படும்.

8. உலகத்தில் பலர் சுகமாக இருக்கின்றார்கள்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

அவர்களுக்கெல்லாம் எந்த கஷ்டமும் வரவில்லை. எனக்கு மட்டும் இந்த கஷ்டம் ஏன் வந்தது என்று நினைப்பது "ஈர்ஷ்யை".

9. தன்னை போலவே பிறருக்கு வசதி வாய்ப்பு வருமானால், அது எப்படி அவர்களுக்கு வரலாம் என்று நினைத்து, அதை சகித்து கொள்ள முடியாமல் தவிப்பது "மாத்ஸர்யம்".

10. நான் சுகமாக இருக்க பிறந்தவன். நான் சுகமாக இருப்பது நியாயம். அவன் எப்படி சுகமாக இருக்கலாம் என்று நினைப்பது "அசூயை".

11. புகழ் வர வேண்டும் என்பதற்காகவே தர்மம், பூஜை, நல்ல செயல்கள் இவைகளை செய்வதற்கு டம்பம் என்று பெயர். அல்லது இவைகளை செய்து விட்டு, தானே அதை பலரிடம் திரும்ப திரும்ப சொல்வதும் "டம்பம்" ஆகும்.

12. உலகத்தில் என் அழகிற்கோ, அறிவிற்கோ, வீரத்திற்கோ, என்னை போன்ற நல்ல குணங்களோ, பலத்திலோ அல்லது சாமர்த்தியமோ செல்வமோ, பதவியோ, நிர்வாக திறமையோ அல்லது இவற்றில் ஏதோ ஒன்றை நினைத்து, என்னை போல உலகத்தில் வேறு ஒருவர் உண்டா என்று நினைப்பது "தர்ப்பம்".

13. எந்த செயலிலும் அதனுடைய பலாபலன்களை பற்றி எடுத்து சொன்னாலும் புரிந்து கொள்ளாமல், பிடிவாதம் பிடிப்பது "அஹங்காரம்" ஆகும்.

14. உணவு உண்பது, நீர் அருந்துவது, மலஜலம் கழிப்பது, உறங்குவது போன்ற செயல்களுக்கு "இச்சை" என்று பெயர்.

15. குருவிடமும், தெய்வத்திடமும், நல்லவர்களான சாதுக்களிடத்தும் அதிகமான ப்ரியம் வைப்பது "பக்தி".

16. வேதத்தில் சொல்லப்பட்ட விஷயங்களிலும், வேதம் விதித்த கர்மாக்களிலும், வேதத்தை ஒட்டி வரக்கூடிய சாஸ்திரங்களிலும், குரு சொன்ன விஷயத்தையும் கொஞ்சம் கூட ஆலோசிக்காமல் **COMPROMISE** செய்து கொள்ளாமல், நம்பி செயல்படுத்துவது "சிரத்தை" எனப்படும்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளிலிருந்து

ஒரு வீட்டில் ஒரு சிறு குழந்தை இருக்கிறது. அந்த குழந்தைக்கு நாம் அன்றாடம் பழகும் பல பொருட்களை பற்றி, வீட்டிற்கு வரும் மனிதர்களை பற்றி எல்லாம் கற்று தருகிறார்கள். ஆனால் அந்த குழந்தையிடம், "கோபம் என்றால் என்ன, அது வந்தால் ஒருவர் எப்படி இருப்பார்" என்று யாரும் சொல்லி தருவதில்லை. அந்த வயதில் அதற்கு கோபம் என்றால் என்ன என்று சொன்னாலும் புரியாது. யாரும் கற்றுத்தர முயற்சிப்பதும் இல்லை. அது கொஞ்சம் வளர்ந்து விட்டால், அதை பற்றி எல்லாம் சொல்லி கொடுக்க தேவை இல்லாமல் போய் விடுகிறது. ஏதோ ஒரு நாள் தந்தை, அலுவலகத்திலிருந்து திரும்பி வருகையில் அம்மாவிடம் சண்டை போடுகிறார். ஆடைகளை அலங்கோலமாக தூக்கி எறிகிறார். முன்னால் இருக்கும் பொருட்களை தட்டி எறிகிறார். குழந்தை பக்கத்தில் வந்தாலும், கண்டு கொள்ளாமல் இருக்கிறார். அப்பொழுது குழந்தை தனியாக அம்மாவிடம் போய் "அப்பா கோபமாக இருக்கிறார்" என்கிறது.

கோபம் என்றால் என்ன எனும் அறிவு, அதற்கு அனுபவ வாயிலாக நேரில் பார்த்தே, தானாகவே வந்து விடுகிறது.

அப்படித்தான் ஜனங்களுக்கு பக்தி என்றால் என்ன என்று விளக்க முடியாது. விளக்கினாலும் புரியாது. ஆனால் அந்த ஜனங்களே உத்தமமான மஹான்களின் பூஜை, அர்ச்சனை, கீர்த்தனம், பிரவசனம் ஆகியவற்றை நேரில் பார்த்து, அவர்களிடம் அவ்வப்பொழுது காணப்படும் பரவசம், மூர்ச்சை, கத்கதம், ஆனந்த நீர் பெருகுதல், சுபாவிகமான அன்பு ஆகியவற்றை பார்த்து "ஆஹா! பக்தி என்றால் இப்படித்தான் இருக்கும்" என்று புரிந்து கொள்கின்றனர். அதன் பின்னர், ஒருவரின் செயலை பார்த்து, இது பக்தியா அல்லது பக்தி இல்லையா என்று சொல்லும் அறிவு கொஞ்சம் ஏற்படுகிறது.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

மஹான்களின் சன்னதிக்கு சென்றால்தான், தெய்வீக விஷயங்கள் நமக்கு சரியாக புரிய வரும். நமக்கும் பக்தி, ஞானம் வேண்டுமானால், அவர்களின் தரிசனம்தான் அதற்கு வழிகோலும். வேறு வழி இல்லை.

சிறுவயதில் பலர் ஒன்றாக நெருங்கி பழகுவர். சிலர் நமது வீட்டிலேயே வளருவர். அவர்கள் உறவினராகவோ அல்லது நண்பராகவோ இருக்கலாம். ஆனால், அவர்கள் பிற்காலத்தில் ஒரு பெரிய கலெக்டராகவோ அல்லது பெரிய அதிகாரியாகவோ ஆகி விடலாம். நாமும் வளர்ந்த பின்பு, நமக்கு ஒரு அத்யாவசிய காரியம் ஆக வேண்டி இருக்கிறது என வைத்து கொள்வோம். அதற்கு நம்முடன் வளர்ந்தாரே, அந்த கலெக்டரின் சிபாரிசு இருந்தால், சீக்கிரம் முடிந்து விடும் என்று தெரிய வருகிறது. ஆனாலும் அந்த கலெக்டரிடம் நாம் போக மாட்டோம். ஏன் எனில் "அந்த கலெக்டர் நாம் பார்த்து வளர்ந்தவர்தானே, அவரிடமா சிபாரிசுக்கு செல்வது, நம் கௌரவம் என்னாவது" என்று நமது அகங்காரம் நம்மை தடுக்கும். இதே தெரியாத ஒருவராக இருந்தாரெனில், சிபாரிசுக்கு சென்று விடுவோம்.

சென்றால் காரியம் நடந்து விடும் என்று நன்றாக தெரிந்தாலும், அகங்காரம் அதை நம்மை செய்ய விடாது. அதனால் நமக்கு காரியமும் நடக்காமல் நின்று விடும்.

அதுபோலவே, பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு மஹானை பற்றி கேள்விப்படுகையில், அவர் மேல் பூஜ்யதா பாவம் ஏற்படும். நாம் வாழும் சம காலத்தில், ஒருவர் மஹானாக வாழ்ந்து கொண்டிருப்பார். அவர் மஹான் என்று நமக்கு நன்றாக தெரியலாம்; அவரை முன்பே தெரிந்தும் இருக்கலாம். அவரை தரிசித்து வணங்கினால், நமக்கு நன்மைகள் பெருகுமே என்றாலும், அவரை பார்க்க போக மாட்டோம். நாம் பழகின ஒருவர், நம்மை போன்ற ஒருவரை போய் தரிசிப்பதா என்று உலக மக்கள் அலட்சியப்படுத்துவர். அவர்களுடைய அகங்காரமானது, அவர்களை, பலவிதத்திலும் மஹான்களிடம் செல்ல விடாமல் தடுக்கும். அதனால், வரக்கூடிய நன்மையை வரவிடாமல் செய்து விடும். இது எல்லா மஹான்களின் காலத்திலும், சகஜமாக நடக்கும் ஒன்றுதான்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் - 8

சென்னை ராமகிருஷ்ணா மடம் - ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா ஜூலை 15, 2012 அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஆற்றிய உரை

---

ராமகிருஷ்ணானந்தர் எனப்பட்ட சசி, சிறு வயதிலேயே வேதம், சாஸ்திரம், இதிஹாசம் ஆகியவற்றில் உள்ள விஷயங்களை நன்கு கற்றார். அவர் பின்னர் கேசவசென் என்பவரின் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லி கொடுத்து வந்திருந்தார். கேசவசென் மூலமாக, அவருக்கு ப்ரும்மசமாஜத்தின் சம்பந்தம் ஏற்பட்டது. உருவ வழிபாடு, நாமகீர்த்தனம், ஜாதிகட்டுப்பாடு ஆகியவற்றில் ப்ரும்மசமாஜத்தினருக்கு இருக்கும் கொள்கைகளை கவனித்து கொண்டே அதில் இருந்தார் சசி. சசியும் அவரது ஒன்று விட்ட சகோதரரான சரத்தும், முற்பிறவி ஒன்றில் ஜீசஸ் கிறிஸ்துவுடன் இருந்தவர்கள் என்பதை ராமகிருஷ்ணர் ஒரு திவ்ய காட்சியில் கண்டு, அதை "மா"விடம் தெரிவித்தும் இருக்கிறார்.

ப்ரும்மசமாஜத்து கேசவசென்னுக்கு, ராமகிருஷ்ணர் மேல் அலாதி பக்தி உண்டு. ராமகிருஷ்ணரின் பாவசமாதிகளையும் உயர்நிலையையும், அவர் கொஞ்சம் புரிந்து கொண்டவர். அடிக்கடி அவர் ராமகிருஷ்ணரை ப்ரும்மசமாஜத்திற்கு அழைப்பார். ப்ரும்மசமாஜத்தில் கூட்டம் அதிகமாக இருக்கையில், ராமகிருஷ்ணரை சரிவர கவனிக்காமல் போய் விட நேரும். உடன் வந்தவர் கிளம்பி விடலாம் என்றாலும் கூட, ராமகிருஷ்ணரே ஹாஸ்யமாக, "வண்டி வாடகை திரும்பி போக எவன் கொடுப்பான்? மூலையில் இருந்தாலும் சாப்பாடு போட்டால் சாப்பிட்டு விட்டு போவோம்" என்பார். அப்படி எளிமையான குழந்தை சுபாவம் கொண்டவர் அவர்.

ஒருமுறை ப்ரும்மசமாஜத்தில் இருக்கையில் ராமகிருஷ்ணருக்கு பாவசமாதி ஏற்பட்டு விட்டது. லைட் போய் விட்டது. அவர் நரேந்திரர் மேல் பிரியம் வைத்திருந்தார். இருளில் நரேந்திரர், ராமகிருஷ்ணரை தூக்கி கொண்டு போய் விட்டார்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

அவரிடம், "என் மேல் இப்படி பிரியம் வைத்தீர்களானால், ஜடபரதர் மானை நினைத்து மான்பிறவி எடுத்தது போல் பிறக்க நேரும்" என்று எச்சரித்தார். உடனே ராமகிருஷ்ணர் காளியிடம் ஓடி சென்று, "அம்மா! நரேன் இப்படி சொல்கிறானே" என்றவுடன், காளி, "நீ, நரேனை நாராயண ஸ்வரூபமாகத்தான் பார்க்கிறாய். அதில் தவறு இல்லை" என்றாள். ராமகிருஷ்ணர் அதை அப்படியே நரேனிடம் சொல்ல, நரேன், "உங்களுக்கு மூளை குழம்பி இருக்கிறது" என்றார். குழந்தை சுபாவம் கொண்ட ராமகிருஷ்ணர் அதையும் நம்பினார். மறுபடி காளியிடம் முறையிட, அவளோ, "நரேனிடம் சொல். கொஞ்ச நாளில் அவனுக்கும் இந்த மூளை குழப்பம் ஏற் படும்" என்றாள். இப்படி தக்ஷிணேஸ்வர கோவிலில் ராமகிருஷ்ணருடன் அமைந்த வாழ்க்கை, ஒரு ஆனந்த சந்தையாக இருந்திருக்கிறது.

ராமகிருஷ்ணரை தவறாது ஒவ்வொருமுறையும் ப்ரும்மசமாஜத்திற்கு கூப்பிட்டாலும், ஓரிரு மணி நேரங்களே அவர் இருக்கிறார் என்பதால், ஒருமுறை ப்ரும்மசமாஜ ஆண்டு விழாவை தக்ஷிணேஸ்வர கோவிலிலேயே ராமகிருஷ்ணர் முன் கொண்டாடுவது என்று முடிவெடுத்தனர். அது 1883ஆம் வருடம் அக்டோபர் மாதம். அங்கேதான் சசியும் சரத்தும் முதன்முதலாக ராமகிருஷ்ணரை பார்த்தனர். சசிக்கு அப்பொழுது 20 வயது.

ராமகிருஷ்ணர் யாரையும், முதலில் பார்க்கையிலே கூட வெகுநாட்கள் பழகியது போல், சகஜமாக பழகுவார். முதன்முதலாக சசியிடமும், சரத்திடமும் அப்படித்தான் பழகினார். அவர்களிடம் அலமாரியில் இருக்கும் பைபிளை எடுத்து, அதில் ப்ரும்மச் சரியத்தை பற்றி இருக்கும் விஷயத்தை படிக்க சொல்கிறார். "பாக்யவான்கள் ப்ரும்மச்சரியத்தை கர்ப்பத்திலேயே அனுஷ்டிக்கின்றனர். சிலர் தாமாகவே அனுஷ்டிக்கின்றனர். சிலர் பிறரின் தூண்டுதலால் அனுஷ்டிக்கின்றனர். இவர்களுக்கு விண்ணுலக ராஜ்யம் காத்திருக்கிறது" என்று அதில் இருப்பதை இருவரையும் படிக்க சொல்கிறார். இதை அவர்களை படிக்க சொன்னவுடன் அருகில் இருந்த ஒருவர், "ஸ்வாமி! ப்ரும்மச்சரியமே உசத்தி என்கிறீர்களே! அப்படியானால் நாங்கள் எல்லோரும் கல்யாணம் செய்தவர்களாயிற்றே. கல்யாணம் செய்வது தவறா?"



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

என்றவுடனேயே ராமகிருஷ்ணர், "அதை பற்றி உங்களுக்கு தேவையில்லை. அது எங்களை பொறுத்த விஷயம்" என்று சொன்னார்.

மேலும், "செங்கல் பச்சையாக இருக்கையிலேயே, சூளையில் வேகும் முன்னரே, அதில் சூலம் போன்ற சின்னத்தை பதித்து விட்டால், அது பின்னர் ஸ்திரமாக நின்று விடும். சிறு வயதிலேயே உங்களிடம் ப்ரும்மச்சரியத்தை பற்றி சொல்லி விட்டால், எவ்வளவு உலகத்தில் பழகினாலும் அது உங்களை பாதிக்காது என்பதால் சொன்னேன்" என்றார் ராமகிருஷ்ணர். உடனிருந்தவர் வற்புறுத்தி, சில கேள்விகள் கேட்கையில் "தன்னை கட்டுப்படுத்தி கொள்ள முடியாதவன் வேண்டுமானால் திருமணம் செய்து கொள்ளட்டும். திருமணம் செய்யாமல் விரும்புவதை விட, திருமணம் செய்து கொள்வதே சிறந்தது" என்பதையும் அழகாக எடுத்து சொன்னார். சசியும் சரத்தும் அத்தகைய தூய வாழ்க்கை வாழ தகுதி பெற்றவர்கள் என்பதை தனது பிரதம தரிசனத்திலேயே கண்டு கொண்டவர் ராமகிருஷ்ணர்.

(தொடரும்)

rb rajmani builders
launches its new project
"rajmani's mathura"
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
ADVT
website: www.rajmanibuilders.com



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன், குளோபல் ஆர்கனைசேஷன் பார் டிவினிடி இந்தியா டிரஸ்ட் இரண்டாவது வருடமாக சம்ஸ்க்ருதி - **2013** போட்டியை நடத்தியது. இதில் **1200**மாணவ செல்வங்கள் **60**பள்ளிகளிலிருந்து பங்கு கொண்டனர். இந்நிகழ்ச்சி ஆகஸ்டு **18** அன்று, சென்னை தியாகராயநகர் தாராசந்த் கலாடா பள்ளியில், ஆசிரியர்களின் முழு ஒத்துழைப்புடன் நடைபெற்றது. **180**மாணவர்கள் பங்கு கொண்ட புராநவா புதிர் போட்டியில், பத்மா சேஷாத்திரி மேல்நிலைப்பள்ளி வெற்றி பெற்றது.

"மனிதநேயமும் தெய்வீகமும் இணை பிரியாதவை" என்ற தலைப்பில் நடைபெற்ற, **72**மாணவர்கள் பங்கு கொண்ட கட்டுரை போட்டியில், தாராசந்த் கலாடா பள்ளியிலிருந்து, ஸ்ரீஹரி என்ற மாணவன், சிறந்த கட்டுரை எழுதி வெற்றி பெற்றான். பாலவித்யா மந்திரிலிருந்து குமாரி லவணிகா எனும் மாணவியும், மிக சிறப்பான கட்டுரை எழுதி இருந்தாள். கட்டுரைகளெல்லாம் அற்புதமாக இருந்தன என்பதை சொல்ல வேண்டியது அவசியமாகிறது.




பானையில் ஓவியம் தீட்டும் போட்டியில், **120**மாணவர்களின் திறன் அதிசயிக்கும் வகையில் இருந்தது. இதனால், நடுவர்கள் தேர்வு செய்ய தடுமாற நேரிட்டது என்றால் பார்த்து கொள்ளுங்கள். மொத்தமாக ஓவியம், காகித வண்ணப்பைகள், ஆடை வண்ணம், பானை வண்ணம் ஆகிய போட்டிகளில் **190**மாணவ செல்வங்கள் பங்கு கொண்டு தங்கள் திறமையை அற்புதமாக வெளிப்படுத்தினர்.

இப்போட்டிகளில் **G.O.D** டிரஸ்டால் கொடுக்கப்பட்டு இருந்த **India – a fertile land for spirituality, Nature the best teacher, My family-my first inspiration, My India –My Pride, Love to live, Live to love, Colours of Hope, Ancient wisdom in modern world, Faith can erase obstacles, Peace comes from within, Think Happy, Be happy** ஆகிய தலைப்புகள் மிக அருமையாக இருந்தன.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

## சனாதனப்புதிர் பகுதி 55 - கேள்விகள் - ஆத்ரேயன்

1. முத்கல மகரிஷி உஞ்சவிருத்தி எடுத்து வாழ்க்கை நடத்தியது எந்த ஊரில்?
2. ஐராவதத்தின் வம்சத்தில் வந்த கம்சனின் இடம் இருந்த யானையின் பெயர் என்ன?
3. கார்த்யவீர்யார்ஜுனன் தந்தையின் பெயர் என்ன? எந்த ஊர் அரசன்?
4. மஹாபாரத யுத்தத்தில் க்ரௌஞ்ச வியூகத்தை முதலில் அமைத்தவர் யார்?
5. குசநாபரின் பிள்ளை யார்? பேரன் யார்?
6. கைவல்ய நவநீதம் என்ற நூலை இயற்றியவர் யார்?
7. க்ருபி — இவர் யார்?
8. க்ருபாசார்யரின் தாய், தந்தை யார்?
9. கைவல்ய நவநீதத்திற்கு எளிய / அரிய உரை எழுதி இருப்பது யார்?
10. பார்ஹஸ்பத்யம் என்பது என்ன?

## விடைகள்

1. குருக்ஷேத்திரத்தில்
2. குவலயாபீடம்
3. கிருதவீர்யன்; மாஹிஷ்மதி
4. பீஷ்மர்
5. காதி; விஸ்வாமித்திரர்
6. தாண்டவராய ஸ்வாமிகள்
7. கிருபாசார்யரின் சகோதரி: துரோணரின் மனைவி: அஸ்வத்தாமாவின் தாய்:
8. சரத்வான் (தந்தை); ஜான்பதி அப்ஸரஸ் (தாய்)
9. பலர்; அருணாசல ஸ்வாமிகள் உரை எளியது
10. பிரும்மாவினால் எழுதப்பட்டு, பிரஹஸ்பதியால் தொகுக்கப்பட்ட **3000**அத்யாயங்கள் கொண்ட நீதி சாஸ்திரம்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

ஸ்ரீஹரி:

**மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் ஸந்நிதி**

மதுரபுரி மஹாரண்யம் கிராமம்


**புரட்டாசி கடைசி சனிக்கிழமை**

**அன்னகூட உத்ஸவம் மற்றும் கூட்டு பிரார்த்தனை**

நாள்: 12.10.2013 நேரம் காலை: 8.30மணி

அனைவரும் வருக இறையருள் பெறுக
மேலும் விபரங்களுக்கு

தொடர்பு கொள்க : 9025025042/ 044-37104183





# ஸ்ரீ ஸுதர்சனா கேட்டரிங் சர்வீஸ்

**நெ.1/273, பெருமாள் கோவில் தெரு, மணிமங்கலம், சென்னை - 601301**

**திருமணம், உபநயனம், கிரஹப்ரவேசம்
சீமந்தம் மற்றும் அனைத்து இல்ல
சுபநிகழ்ச்சிகளுக்கும் நல்ல முறையில்
தேவைக்கேற்ப செய்து தரப்படும்.**

**R.பத்ரி நாராயணன்**

**(கேட்டரிங் காண்ட்ராக்டர்)**

**97911 33001 / 89394 83949**

**Email: srisudarsanacatering24@gmail.com**



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

"ஞானம் அடைவதற்கு குரு, சத்சங்கம், ஞானம் அடைவதற்கான வழி ஆகிய மூன்றும் முக்கியமானவை" என கபீர்தாசர் சொல்கிறார். ஞானம் அடைவதற்கான சாதனம்தான் நாமகீர்த்தனம். அதுதான் பகவானின் அருளை குருவின் அருளை பெற்று தரும். சத்சங்கத்திற்கு அடிக்கடி சென்றால்தான் "பகவான் நாமம் சொன்னால் அருள் புரிவான்" என்று அடிக்கடி நமக்கு தோன்றும். நாமகீர்த்தனம் பகவானின் அருளை பெற்று தரும் என்பதை சத்சங்கம் ஞாபகப்படுத்தும். குருவானவர் எதற்கும் அடங்காத நமது அகங்காரத்தை அழிப்பவர். அகங்காரமின்றி, பகவான் மேல் நம்பிக்கையுடன், சரியான சாதனத்தை செய்து வந்தால், பகவானின் தரிசனம் நிச்சயம் கிடைக்கும் என்பதைத்தான் மஹான்கள் உபதேசித்து வருகின்றனர்.

- ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளிலிருந்து

## புராநவா-பெங்களூரு 2013

ஆகஸ்டு **3** அன்று பெங்களூரு சர்புத்தணா செட்டி டவுன் ஹாலில் **புராநவா-பெங்களூரு 2013** நடைபெற்றது. **23**பள்ளிகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர். ஊக்குவிப்பதற்காக வந்த **250**அன்பர்களும் சுமார் **3**மணி நேரம் கரகோஷம் எழுப்பியவாறே இருந்தனர். சென்னை **சாந்தீபனி குருகுல டிரஸ்ட்** பிரின்சிபால் ஸ்ரீ உ. வே. பாலாஜி மற்றும் **G.O.D** இந்தியா டிரஸ்ட் சார்பாக குமாரி.பூர்ணிமாஜி ஆகியோர் நடுவர்களாக பங்கேற்றனர். **G.O.D** பெங்களூரை சேர்ந்த அன்பர்கள் இந்நிகழ்ச்சியை மிக சிறப்பாக ஒருங்கிணைத்து இருந்தனர். **Florence English School – Rajaji Nagar** முதல் பரிசை தட்டிச் சென்றது. கலந்து கொண்ட அனைத்து மாணவ செல்வங்களுக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற பள்ளிகளுக்கு நேரில் சென்று **"Puranava 2013"** டிராபியை . **G.O.D** பெங்களூரை சேர்ந்த அன்பர்கள் வழங்கினர். ஸ்ரீசங்கரா டிவியின் **C.R.O**, ஸ்ரீபவன்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# பாலகர்களுக்கு ஒரு கதை



## இனித்த ஐந்து ரூபாய்!

கோபாலன் ஒரு சிற்றுண்டி சாலைக்குள், வெய்யிலில் வாடி பசியுடன் சென்றான். நான்கு இட்லிகளை கொண்டு வர சொன்னான். அது வர கொஞ்சம் தாமதமாகியது. அதற்குள் பொறுக்காமல் கோபாலன் அந்த பண்டக சாலை பணியாளரை கோபமாக திட்டினான். எரிச்சலை முகத்தில் காண்பித்தான். அந்த பணியாளரோ கொஞ்சமும் முகம் சுளிக்காமல் இனிமையாக "வெய்யில் அதிகமல்லவா? அதனால்தான் தாகத்தினால் தவிக்கிறீர்கள்?" என்று புன்முறுவலுடன் பேசினார். குளிர்ந்த நீரை கொண்டு வந்து வைத்தார். "இதோ வந்து விடும்" என்று சென்றவர், சில நிமிடங்களில் இட்லியை கொண்டு வந்தார்.

அது சுவையாய் இருந்தது. அது இரு வாய் உள்ளே சென்றவுடன், கோபாலனின் பசி அடங்கியது. கோபமும் எரிச்சலும் அடங்கியது. அப்பொழுதுதான், அவன் தான் கோபப்பட்டு பேசினோம் என்பதை உணர்ந்தான். அந்த பணியாளரை கூப்பிட்டு "அய்யா! உங்கள் மேல் தவறுதலாக கோபப்பட்டு விட்டேன். இருந்தும் நீங்கள் எப்படி பொறுமை காட்டினீர்கள்? மேலும் இன்முகத்துடன் பேசினீர்களே" என்றான்.

கோபாலன் குரலில் குற்ற உணர்ச்சி தொனித்தது. அந்த பணியாளர் உடனே தன் கை மணிக்கட்டை பார்த்து கொண்டார். அங்கு ஏதோ ஒரு தாயத்து கட்டப்பட்டு இருந்தது. கோபாலனை பார்த்து அவர் "என் பெயர் கணேசன். நீங்கள் சொல்லும் என் குணத்திற்கு காரணம் இதுதான்" என்று அந்த தாயத்தை காட்டினார். "இதுவா, அது எப்படி" என்றான் கோபாலன் ஆர்வமுடன். அவனுக்கு குற்ற உணர்ச்சி இன்னும் போகவில்லை.

உடனே கணேசன் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து "அது ஒரு கதை" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு நடந்த கதையை சொல்ல ஆரம்பித்தான். "ஏழெட்டு வருடம் முன்பு ஒரு தீபாவளி அன்று நான் இங்கு புதிதாக வேலைக்கு



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

சேர்ந்திருந்தேன். என்னிடம் என் குழந்தைக்கு ஒரு இனிப்பு வாங்கி தர கூட பணம் இல்லை. மிக வருத்தமுடன் இருந்தேன். அப்பொழுது ஒரு சிறுவன் இங்கு வந்தான். தீபாவளி அல்லவா? பல வகையான இனிப்பு தின்பண்டங்கள் கண்ணாடி பெட்டிக்குள் இருந்தன. அவற்றை ஆசையுடன் நோட்டம் விட்டு கொண்டே வந்தான் அவன். யோசித்தவாறே இதோ இந்த மேஜையில்தான் வந்து அமர்ந்தான் அவன். அவன் உட்கார்ந்தவுடன், தன் கால்சட்டைப்பைக்குள் இருந்து, மூன்று நாணயங்களை எடுத்து அவற்றை பார்த்து பார்த்து எண்ணினான். அவனிடம் இருந்ததே மொத்தம் மூன்று காசுகள்தான். பதினைந்து ரூபாய்தான். நான் அவனை பார்த்து "என்ன வேண்டும்" என்று கேட்டேன்.

அவனோ அம்மூன்று நாணயங்களையே எண்ணிக் கொண்டு இருந்தான். எனக்கு எரிச்சல் வந்தது. ஏற்கனவே என் குழந்தைக்கு எதுவும் தர முடியவில்லையே என்று வருத்தம் வேறு எனக்கு. அதை வாய் விட்டு, மெல்லமாக சொல்லி சொல்லி புலம்பி கொண்டு இருந்தேன். இந்த பையன் 15ரூபாய்க்கு என்ன பெரிதாக சாப்பிட போகிறான் என்றுதான் நினைத்தேன்.

சிறுவன் என்னை பார்த்து "அய்யா! அதோ அங்கு இருக்கிறதே, அந்த இனிப்புகள் பதினைந்து ரூபாய்க்கு எவ்வளவு கிடைக்கும்" என்று கேட்டான். நான் "மூன்று கிடைக்கும்" என்றேன். கொண்டு வாருங்கள் என்றான் அவன். இதற்குத்தான் இவ்வளவு நேரம் எண்ணினாயா என்று மனதுக்குள் திட்டி கொண்டே நான் நகர, அவன் உடனே மறுபடி என்னை கூப்பிட்டு "இல்லை. இரண்டு கொடுங்கள் போதும். அது எவ்வளவு விலை" என்றான். நான் கோபமாக "இரண்டா மூன்றா எவ்வளவு வேண்டும். இரண்டு பத்து ரூபாய்" என்று எரிச்சலுடன் சொன்னேன். அவன் இரண்டே போதுமென்றான்.

நான் அவனுக்கு தேவையானதை கொடுத்து, அவனை அனுப்புவதிலேயே குறியாக இருந்தேன். இங்கு பல பெரியவர்கள் ஏதேதோ குடும்பத்துடன் சாப்பிட்டு கொண்டிருக்க, இந்த 10 ரூபாயினால் என்ன வருமானம் வர போகிறது என்று நான் நகர்ந்தேன். அந்த பையன் மட்டும், தன் மோவாய்க்கட்டையை தட்டி ஏதோ ஆழ்ந்து சிந்தித்தவாறு இருந்தான். இரண்டே நிமிடங்களில் அவன் கேட்ட இனிப்பை அவன் மேஜையில்



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

கொண்டு வைத்தேன். அவன் நிதானமாக சாப்பிட்டு முடித்தான். பில்லை கொண்டு கொடுத்தேன். அடுத்த மேஜையை, நான் பார்ப்பதற்குள், அவன் கிடுகிடுவென நடந்து வெளியேறினான்.


பையன் பணம் கட்டாமலே போயிருந்தான். பில் என்ன ஆயிற்றோ என்று அவன் அமர்ந்த மேஜை பக்கம் விரைந்தேன். அங்கு பில்லின் மேல் இரு 5ரூபாய் நாணயமும், எனக்காக ஒரு 5ரூ பாய் நாணயமும் அவன் வைத்து விட்டு சென்றிருந்தான். அதை பார்த்தவுடன், பையன் ஏமாற்றி விட்டு போகவில்லை என்று எனக்கு புரிந்தது. அது மட்டுமல்ல, நான் என் குழந்தைக்கு எந்த இனிப்பும் வாங்கி தரவில்லை என்று புலம்பியதை கேட்டிருந்த அவன், என் குழந்தைக்காக 5ரூபாயை விட்டு சென்றிருக்கிறான் என்றும் புரிந்தது. என் மனம் நெகிழ்ந்தது. கடை வாசலுக்கு ஓடினேன். என் கண்கள் சாலையின் இருபுறத்தையும் தேடின. சிறுவன் அதற்குள் எங்கோ சென்று மறைந்து இருந்தான்.

எனக்கு அழுகை அழுகையாய் வந்தது. "அடடா! தங்கமான பையனை சந்தேகித்தோமே! அலட்சியமாய் நடத்தினோமே! சிறு வயதானாலும் வானம் போல் உயர்ந்த உள்ளம் கொண்டவனாக இருக்கிறானே" என நினைத்தேன். அது மட்டுமில்லாமல் அவனிடம் அப்படி நடந்ததற்கு, பிராயச்சித்தமாக இனி ஒருவரையும் உருவத்தை பார்த்து மதிப்பிட கூடாது என்றும் முடிவு செய்து கொண்டேன். எல்லாவற்றுக்கும் ஞாபகமூட்ட ஒன்று வேண்டுமல்லவா? இச்சம்பவம் மறக்க கூடாது என்பதற்காக அவன் என் குழந்தைக்காக கொடுத்த ஐந்து ரூபாயையே, எனக்கு கிடைத்த இனிமையான பாடத்திற்கு ஞாபகார்த்தமாக, வைத்து கொள்ள முடிவு செய்தேன். அப்பொழுது என்னவென்று கேட்டீர்களே, அது தாயத்து இல்லை. அந்த சிறுவன் கொடுத்த ஐந்து ரூபாய்தான். அதையே தாயத்து போல் கட்டி கொண்டேன்" என்றான் கணேசன். அதை கேட்ட கோபாலனுக்கு மிக ஆச் சரியமாக இருந்தது. அவன் கணேசனிடம் "உங்களிடம் ஒரு ஐந்து ரூபாய் இருந்தால் கொடுங்கள்" என்று கேட்டு வாங்கி, அதை தன் கைகளில் கட்டி கொண்டான். அன்றிலிருந்து அவனும் யாரையும் அனாவசியமாக தவறுதலாக எடை போடுவதில்லை என்றும், அநாவசியமாக கோபப்படுவதில்லை என்றும், மௌனமாக முடிவு செய்து கொண்டான்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI


Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji
VAPSSKY
absolute motion machine
ADVT
Our products
Globe Tipper
GLOBE TIPPER
Unit Converter
UNIT CONVERTER
LT
ML
Smart Alarm Pro
PRO
Smart Alarm
DRACO, The Dragon
DRACO
Our Solutions
Mobile Games
Mobile Data Security Systems
Multimedia content Exchange
Mobile Applications
Mobile Enhancement Utilities
3D Multiplayer Games
For any Business Related Enquiry email us at contact@vapssky.com


WEB
MOBILE APPS
BUDDIES INFOTECH
PRIVATE LIMITED
DESIGN
GAMES
75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com
www.buddiesinfotech.com

## சத்சங்க செய்திகள்

**ஆகஸ்டு 09 –** சென்னை ப்ரேமிக பவனத்தில், ஆடிப்பூரத்தை முன்னிட்டு, ஆண்டாள் கல்யாணம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**ஆகஸ்டு 15 –** சென்னை கொடுங்கையூர் ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், சுமார் 1500 அன்பர்கள் முன்பு ஸ்ரீனிவாச பெருமாளை குறித்து அருளுரை வழங்கினார்கள்.

**ஆகஸ்டு 16 –** மதுரபுரி ஆஸ்ரம கோசாலாவில், வரலஷ்மி பூஜை ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

**ஆகஸ்டு 15 – G.O.D** இந்தியா டிரஸ்ட் மற்றும் தூத்துக்குடி ஸ்ரீசக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை சார்பாக, மணிமங்கலம் மற்றும் மஹாரண்யம் கிராம அரசு பள்ளிகளில், பத்தாவது வகுப்பில் சிறப்பாக தேர்ச்சி பெற்ற, முதல் மூன்று மாணாக்கர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளி சிறப்பாக தேர்ச்சி பெற உழைத்த ஆசிரியர்களுக்கும், சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. **G.O.D** இந்தியா டிரஸ்ட் சார்பாக, **Dr.**பாக்யநாதன் அவர்களும், தங்கள் குமாரன் ஸ்ரீனிவாசன் நினைவாக ஸ்தாபிக்கப்பட்ட தூத்துக்குடி சக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளையிலிருந்து, திருமதி.மாலாகண்ணன், திரு.கண்ணன் தம்பதியினரும் பங்கேற்றனர்.

**ஆகஸ்டு –** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன், சிங்கப்பூர் மற்றும் மலேசிய நாமத்வார்களில், ராமானுஜம்ஜி மற்றும் ஸ்ரீஅஸ்வின் சத்சங்கங்களை நிகழ்த்தினர்.

**ஆகஸ்டு –** ஸ்ரீபரத் கணபதி **G.O.D** ஐரோப்பா சார்பாக, தொடர்ந்து ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளில் பல இடங்களில் மஹாமந்திர சத்சங்கங்களை நிகழ்த்தினார்.

**ஜூலை 29 –** ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்ட் மற்றும் **Dentistree** இணைந்து, ஜூலை 29 அன்று, மஹாரண்யம் கிராம அரசு பள்ளியில் ஒரு சிறப்பு பல் மருத்துவ முகாம் வழங்கின. **Dr.**விக்ஞான், **Dr.**அஜய், **Dr.**அங்கையற்கண்ணி ஆகிய மருத்துவர்கள் பங்கேற்று மாணவர்களுக்கு பரிசோதனைகளை செய்தனர். 300மாணாக்கர்கள் பயனுற்றனர். பல் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த ஒரு சிறப்பு விளக்க உரையும் **Dr.**அஜய் வழங்கினார்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# *ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்*



*- ஜனனி*

## ஸ்ரீஹம்ஸதாஸ் பாபாஜி மற்றும் ஸ்ரீகோபாலீபாயி -9

தந்தையின் மரணத்திற்கு பின் க்ருஷ்ணதாஸரும் ஸம்ஸாரத்தை துறந்து, பஜனை செய்வது என்று முடிவெடுத்தார். அப்போது அவருக்கு 17 வயதுதான் ஆகியிருந்தது. மெட்ரிக் பரீட்சையை பாஸ் செய்திருந்தார். அவரது சகோதரர்களோ, அவரை கல்லூரியில் சேர்த்து மேற்படிப்பு படிக்க வைக்க வேண்டும் என்று எண்ணினர். ஆனால் க்ருஷ்ணதாஸரோ, தனது எண்ணத்தை மாற்றிக் கொள்வதாக இல்லை. தனது சகோதரர்களிடம், இதைப்பற்றி எதுவும் கூறவும் அவர் விரும்பவில்லை. ஒருநாள், எங்கோ வெளியே செல்வது போல், வீட்டை விட்டு கிளம்பி, அப்படியே ரயில் ஏறி, பூரி தாமத்திற்கு சென்றுவிட்டார்.

பூரியில், ஸ்ரீநித்யானந்ததாஸ் எனும் பாபாவை அவர் சந்தித்தார். அவரும் ஸ்ரீக்ருஷ்ணதாஸரின் வயதை ஒட்டி, இருந்ததோடு மட்டுமல்லாமல், இவரை போலவே வீட்டை விட்டு பகவானை நாடி வெளியேறியிருந்தார். நித்யானந்ததாஸ் மிகவும் எளிமையானவரும் வெகுளியானவருமாக இருந்தார். க்ருஷ்ணதாஸருடன் அவருக்கு நல்ல உறவு ஏற்பட்டது. இருவருமாக சேர்ந்து நடையாக ஸ்ரீப்ருந்தாவன யாத்திரையை மேற்கொள்வது என்று நிச்சயிக்கப்பட்டது.

ஜாரிகண்ட் எனும் இடத்தை அடையும் வரை, இருவரும் சேர்ந்தே பயணித்தார்கள். ஆனால், அங்கிருந்து இருவரும் தனித்தனியாக பயணிக்க தொடங்கினார்கள். நித்யானந்தருக்கு கீர்த்தனத்திலேயே அதிக ருசி இருந்தது. க்ருஷ்ணதாஸருக்கோ ஸ்மரணத்திலேயே அதிக ஈடுபாடு இருந்தது. வழியில் ஓர் இடத்தில், மிக மதுரமாக கீர்த்தனம் நடந்து கொண்டிருப்பதை கண்ட நித்யானந்ததாஸ் அங்கேயே தங்கிவிட்டார். க்ருஷ்ணதாஸரோ, தனது ப்ருந்தாவன யாத்திரையை மேலே தொடர்ந்தார்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

ப்ருந்தாவனத்தில் ஜாடூ மண்டலத்தில் தங்கி, ஸந்யாஸம் பெற ஒரு தகுந்த குருவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார். மந்திர தீக்ஷையை அவர் வீட்டில் இருந்தபோதே ஸ்ரீகோவிந்தானந்த கோஸ்வாமியிடமிருந்து பெற்றிருந்தார்.

சில நாட்களில் பஸோலி க்ராமத்தைச் சேர்ந்த ஸ்ரீக்ருஷ்ணதாஸ் பாபாவை தரிசித்து, அவரிடமிருந்து ஸந்யா ஸமும் பெற்றார். க்ருபாஸிந்துதாஸ் என்ற தீக்ஷா நாமமும் பெற் றார். ஸந்யாஸம் பெற்றவுடன், வ்ரஜ க்ராமங்களில் இருந்து கொண்டு பஜனை செய்ய தொடங்கினார். சில நாட்களில் பர்தியா எனும் க்ராமத்தில் வஸித்தார். பின், பதாவல் எனும் க்ராமத்தில் ஸ்ரீகோபால்தாஸ் பாபாவின் அருகில் தங்கி, அவருக்கு ஸேவை செய்யலானார்.

அச்சமயங்களில் பண்டித் ஸ்ரீராமக்ருஷ்ணதாஸ் பாபாஜி குஸும ஸரோவர் அருகில் உள்ள, ஷ்யாமகுடீரில் பஜனை செய்து வந்தார். அவரது உடல் நிலை சரியாக இல்லாததால் அவருக்கு ஒரு தகுந்த உதவியாளர் தேவைப்பட்டது. கோபால்தாஸ் பாபா இவ்விஷயத்தை அறிந்ததும், க்ருபாஸிந்துதாஸ் பாபாவை ராமக்ருஷ்ணதாஸ் பாபாவின் ஸேவைக்காக அனுப்பிவிட்டார். மிகுந்த ஈடுபாட்டுடன் இந்த ஸேவையை செய்தார் க்ருபாஸிந்துதாஸ் பாபா. பண்டித் பாபாவின் உடல்நலம் தேறியவுடன், அவர் க்ருபாஸிந்துதாஸ் பாபாவை கோபால்தாஸ் பாபாவிடமே சென்று விடுமாறு கூறினார். கோபால்தாஸ் பாபாவோ, க்ருபாஸிந்துதாஸ் பாபாவிடம், இனி எப்பொழுதும் பண்டித் பாபாவுடனே இருந்து அவருக்கு ஸேவை செய் என்று ஆணையிட்டு விட்டார். ஆனால் பண்டித் பாபாவோ ஆரோக்கியமாக இருக்கும்பொழுது யாரிடமிருந்தும், எவ்வித ஸேவையையும் ஏற்பதில்லை என்று பிடிவாதமாக இருந்தார். க்ருபாஸிந்துதாஸ் பாபாவின் அஸாதாரணமான ஸேவை செய்யும் பாவத்தை கண்ட அவருக்கு தனது நியமத்தில் பங்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் இருந்தது. க்ருபாஸிந்துதாஸ் தர்மஸங்கடத்தில் ஆழ்ந்தார். கோபால்தாஸ்பாபாவின் ஆக்ஞையின்படி நடப்பதா அல்லது பண்டித பாபாவின் ஆக்ஞையின்படி நடப்பதா?

(தொடரும்)



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# *மாலே மணிவண்ணா - 120*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

மிக அரிய முயற்சிகளை செய்து அடையக்கூடிய துறக்கத்தை திருமாலிருஞ்சோலை என்கின்ற இந்த மாலிருங்குன்றத்தை தரிசித்து எளிதிற் பெற்று விடலாம். ஆதி சேடனாகிய பாம்பினது மேல்நோக்கிய மெல்லிய தலையால் கவிக்கப்பெற்ற, மணிவண்ணனாகிய கண்ணனுக்கு முன்னோனாகிய பலராமன் அணிந்துள்ள வெண் கடம்ப மாலையை போல, வெள்ளை வெளேர் என்று மாட்சிமை பெற தோன்றி அசைகின்ற அருவிகள், ஆரவாரித்து ஒலித்து கொண்டு இறங்குதலால் உளதாகிய சிலம்பாற்றினால், அழகு பெற்றது அம்மலை.

சோலை எனும் சொல்லோடு தொடர்ந்த சொற்றொடராகிய மாலிருங்குன்றம். அதாவது திருமாலிருஞ்சோலை மலை என்றார். குன்றம் என்பது சோலையோடு தொடர்மொழி சோலைமலை - திருமால் மலை ஆதலின் திருமாலிருஞ்சோலைமலை என ஆயிற்று. (*சென்ற இதழில் பார்த்த "அரா அணர் ... மாலிருங்குன்றம்"பாடலை நோக்குக*)

சீர்கெழுதிருவின்சோலை என்பதை சேர்த்து கண்டால், அழகு பொருந்திய திரு என்னும் சொல்லோடும், சோலை என்னும் சொல்லோடும் மாலிருங்குன்றம் என்னும் சொல் தொடர்ந்த மொழி திருமாலிருஞ்சோலை மலை என்னும் திருநாமம் வரும்.

இதனுள் அரா என்பது ஆதிசேடன். அணர் என்றது மேல் நோக்கிய என்றாகும். பாம்பின் மேல் நோக்கி கவித்த மென்மையான தலைகளின் நிழலில் பெருமான் பலதேவன் காட்சி தருகிறார். பலதேவனது மார்பில் அணிந்துள்ள வெண்கடப்பந்தாரை போல அழகாக இறங்குகிற அருவிகளால் ஆகிய சிலம்பாறு என்கிற நூபுர நதி. இங்கே மாலை என்னாது



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

தார் என்றது அளைத்து கூடாமல் அருவி நெடுக வீழ்தலின் வட்டமாய் இருமுனையும் கூடினால் மாலை, கூட்டாமல் நெடுக விட்டால் தார்.

நூபுர நதி என வழக்கில் உள்லது சிலம்பாறு என்பதும் அதன் தமிழ்ப்பெயரே. இனி இத்திருமாலிருஞ்சோலை மலையை புகழ்ந்து பாடிய அழகர் கிள்ளை விடு தூது என்னும் பிரபந்தத்துள் இச்சிலம்பாறு என்னும் நூபுர நதி சிறப்பாக தசாங்கம் என்ற பகுதியுள் கூறப்பெற்றுள்ளதை காண்போம்.

மலை: இம்மலைகு கேசவாத்திரி, சிங்காத்திரி, இடபகிரி என்னும் பெயர்கள் உள்ளதாக அந்நூல் குறிப்பிடுகிறது.

நூபுர நதி: மேருமலையில் தென்பால் நாவற்பழத்தின் சாறே ஆறாக ஓடுதலால் பெயர் பெற்ற சாம்பூ நத நதியை போல சோலைமலையில் (மாணிக்க மலை) ஓடுகிற நதி நூபுர நதி.

இந்திரனை போன்றது இடப மலை என்கிற மலை. இந்திரன் உடம்பில் உள்ள கண்கள் போன்றது இம்மலையில் உள்ள சுனைகள். திருமாலுடைய தோளில் அணிந்துள்ள முத்துமாலை போல் உள்ளது நூபுர நதி(சிலம்பாறு) என்கிறது அழகர் கிள்ளை விடு தூது.

மலையிலிருந்து நெடுக வீழும் அருவித்திரளை பரிபாடல் பலதேவன் மார்பில் அணிந்துள்ள வெண்கடப்பந்தார் என்று கூறியதை, இங்கே பொருத்தி உணர்ந்து இன்புறுக. இதனையே மாலை என்றால் வட்டமாய் கூடுவதாகும் என்பதால் மலையிலிருந்து கீழே நேராக இறங்குகின்றதால் தார் என்பதே பொருத்தமானது என்பதை பரிபாடல் எடுத்து காட்டி உள்ளது. மேலே பரிபாடல் மலையை ஏத்துகிறது.

*தாம் வீழ் காமம் வித்து புனைவிக்கும்*
*நாமத்தன்மை நன்கனம் படி எழ .... 25*
*யாமத்தன்மை இவ்வையிருங்குன்றத்து*

திருமாலிருஞ்சோலை எனும் நாமத்தினது பெருந்தன்மை நன்றாக பூமியின் கண் பரக்க மகளிரும் ஆடவரும் தாம்விரும்புகிற காமத்தை விதைத்து விளைவித்து இன்ப பயன் கொள்ளுதலை உடைய இந்த அழகிய பெரிய மலை என்பது இதன் விளக்கம். (தொடரும்)



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

# அப்பாலுக்கு அப்பால்



## போலி சரணர்கள்!

கூச்சல் சப்தம் கேட்ட இடத்தில், இரு சரணர்களை கட்டி போட்டிருந்தனர். இருவரும் நல்ல சரணருக்கான உடையையும், ருத்ராக்ஷங்களையும் திருநீற்றையும் அணிந்திருந்தனர். பசவர் வந்து என்ன என்று வினவ அருகிலிருந்தோர் "இவர்கள் நமக்கு கெட்ட பெயர் கொண்டு வருகிறார்கள். இரவில் போகக்கூடாத இடங்களுக்கு இந்த உடையிலேயே செல்கின்றனர். மதுபானம் செய்கின்றனர். இவர்களை நம்முடன் பார்க்கின்ற மக்கள் நாம் இப்படிப்பட்டவரே என்று நினைக்கின்றனர்" என்றனர். பசவர் புருவம் விரிய விரியவே அல்லமரும் வந்து சேர்ந்து விட்டார்.

பசவர் அவ்விருவர் மேலிருந்த சிவ சின்னங்களை பார்த்து கை கூப்பி, "ஏன் இப்படி செய்கிறீர்கள்? உங்களுக்கே தவறு என்று தெரியவில்லையா?" என்று கேட்டவுடன், அவர்களிருவரும் "எங்களை மன்னிக்க வேண்டும்; மன்னிக்க வேண்டும்" என்று சொல்லியவாறே தடாலென பசவரின் கால்களில் விழுந்தனர். கூடியிருந்தவர்கள், இதுவரை தவறை ஒப்பு கொள்ளாதவர்கள் இப்பொழுது மன்னிப்பு கேட்கின்றனரே என்று வியந்தனர். மேலும் அவ்விருவரும் பசவரிடம் "உங்களுக்கு கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்பதற் காகவே எங்களை இப்படி நடந்து கொள்ள சொன்னார்கள். காசுக்கு ஆசைப்பட்டு இப்படி செய்தோம்" என்றனர். பசவருக்கு மேலும் விவரம் தெரிந்து கொள்ள ஆசையில்லை. "எப்படியோ இருங்கள்; ஏன் சமய சின்னங்களை அணிந்து கொண்டு செய்கிறீர்கள்" என்று வருத்தப்பட்டார். அப்படியே கிளம்ப யத்தனித்தார். அல்லமபிரபு, இது போல் இருப்பவரை மனதில் வைத்துத்தான், தம்மிடம், முன்னர், கேள்விகளை வினவினாரோ என்றும் அவருக்கு தோன்றியது!

வேடமிட்டிருந்த அவ்விரு சரணர்களும், பசவரிடம் தங்களை அனுப்ப வேண்டாமென, கெஞ்சி கேட்டு கொண்டு



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

இருந்தனர். பசவரும் இளகிய மனத்துடன், இவர்களுக்கு ஏதாவது சேவை செய்ய கொடுங்கள் என்று சொல்லி விட்டு போய் விட்டார்.

அன்னமிட்டு கொண்டிருந்த இடத்தில், மறுபடி ஏதோ சப்தம் கேட்டது. இம்முறை பசவர் விரையும் முன்னர், அல்லமர் வேக வேகமாக ஓடினார். பசவருக்கு சிரிப்பு. அங்கு ஒரு பக்தரை சுற்றி எல்லோரும் நின்று கொண்டிருந்தனர். என்ன விஷயம் என்று அல்லமர் கேட்டார். நடுவில் நின்றவரை காட்டி "இவரை சரியாக கவனிக்கவில்லை என்று சண்டை போடுகிறார்" என்றனர்.

அவரிடம் "என்ன விஷயம்" என்று கடுமையுடன் கேட்டார் பிரபு. அவர் சளைக்காமல் "புதிதாக வந்தவர்களை கவனிக்கின்றனர். நான் பால் கேட்கிறேன். வரிசையில் வர சொல்கின்றனர். பால் தீர்ந்து விட்டது. என் விரதம் பங்கமானது" என்றார் அவர். அல்லமர் அவரிடம் "சரி. சரி. உன் விரதம் என்ன?" என்றார். அவர் மிடுக்குடன் "தினமும் என்னிடம் இருக்கும் லிங்கத்திற்கு பால் கொடுப்பேன். அதை நான் எடுத்து கொள்வேன். இதை தவறாமல் செய்து வருகிறேன்" என்றார். அல்லமர் அவரை பார்த்து "லிங்கத்துக்கு பால் வார்க்கிறாயா, உன் வயிற்றுக்கு பால் வார்க்கிறாயா?" என்றார். முன்னே இருந்தவருக்கு கோபம் வந்தது. அதை வெளிக்காட்டி கொள்ளாமல், "என் பக்தி உண்மையானது" என்று தட்டு தடுமாறி சொன்னார்.

பிரபு அலட்சியமாக வரை பார்த்து "இதோ பார்! அன்பில்லாமல், பால் கொடுத்து வந்தால், நீ பூனையாக பிறப்பாய். தான்யத்தை கொடுத்தால் குதிரையாக பிறப்பாய். நீரை கொடுத்தால், தவளையாக பிறப்பாய். மலரை கொடுத்தால் வண்டாகத்தான் பிறப்பாய். இவற்றை அன்புடன் சமர்ப்பணம் செய்வதில் கவனம் செலுத்து. உன் மனதில் அன்பு மலருவதுதான் முக்கியம்" என்று இடித்து பேசினார். பசவர் அருகே இருப்பதை பார்த்தவுடன், அல்லமரின் கைகள் உயர்ந்து அந்த அன்பரை ஆசீர்வாதமும் செய்தன. உண்மையான பக்தியை வளர்க்கவே, அல்லமபிரபு கடினமாக நடந்து கொள்கிறார் என்று பசவருக்கு மட்டும் நன்றாக தெரிந்தது.

(தொடரும்)



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .

**D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / நேரில் ரொக்கம் / மணியார்டர் (**D.D /M.O/Cash**) மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | செப்டம்பர் 15, அக்டோபர் 1 |
| ஆக 8 - செப் 6 | கோகுலாஷ்டமி உத்ஸவம் |
| செப்டம்பர் 8,9 | கடலூர் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் |
| செப்டம்பர் 12 | ராதாஷ்டமி |
| செப்டம்பர் 19 | சைதன்யகுடீரம் பிரதிஷ்டா தினம் |
| செப்டம்பர் 21 | பெங்களூர் நாமசங்கீர்த்தனம் |
| அக்டோபர் 5 | நவராத்திரி ஆரம்பம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



PLEASE SUBSCRIBE TO MADHURAMURALI